# වාර්ෂික වාර්තාව - 2013
## ඌව වෙල්ලස්ස විශ්වවිද්‍යාලය

# ஆண்டறிக்கை- 2013
## ஊவா வெல்லஸப் பல்கலைக்கழகம்

# Annual Report - 2013
## Uva Wellassa University




ඌව වෙල්ලස්ස විශ්වවිද්‍යාලය
පස්සර පාර
බදුල්ල

ஊவா வெல்லஸப் பல்கலைக்கழகம்
பசறை வீதி
பதுளை

**Uva Wellassa University**
**Passara Road**
**Badulla**

# ஆண்டறிக்கை - 2013

## ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | எமது தூர நோக்கு ........................................................... | 01 |
| 02. | எமது பணி இலக்கு ........................................................... | 01 |
| 03. | துணை வேந்தரின் செய்தி ........................................................... | 02 |
| 04. | மனித வளங்கள் மற்றும் மாணவர்கள் ........................................... | 05 |
| 05. | மாணவர் சேர்க்கை பற்றிய விபரங்கள்................................................. | 06 |
| 06. | கல்விசார் பதவியினர் குழாம் பற்றிய விபரங்கள் ................................... | 09 |
| 6.1. | 2013 ஆம் ஆண்டிலான கல்விசார் பதவியினர் குழாம் பற்றிய விபரங்கள் ........................................................... | 09 |
| 6.2. | நூலகப் பதவியினர் ........................................................... | 10 |
| 07. | நிருவாக மற்றும் கல்விசாராப் பதவியினர் குழாம் ................................. | 10 |
| 7.1. | நிருவாகப் பதவியினர் குழாம் ............................................ | 10 |
| 7.2. | ஆதரவுப் பதவியினர் (கல்விசாரா) குழாம் .............................. | 11 |
| 7.3. | ஆதரவுப் பதவியினர் (கல்விசாரா) குழாம் பகிர்வு .................... | 12 |
| 08. | ஆராய்ச்சி , புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் ...................................... | 13 |
| 09. | நிகழ்வுத் திட்டங்கள் கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள். .................. | 13 |
| 10. | கிடைக்கப்பெற்ற விருதுகள் பற்றிய விபரங்கள் ....................................... | 14 |
| 11. | மீண்டுவரும் செலவினம் பற்றிய விபரங்கள் ........................................... | 14 |
| 12. | முதலீட்டு செலவினம் பற்றிய விபரங்கள் ............................................... | 14 |
| 13. | கருத்திட்டம் (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியுதவி பெற்ற) பற்றிய விபரங்கள்..... | 15 |
| 14. | கருத்திட்ட செலவினம் (உள்நாட்டு /வெளிநாட்டு நிதியுதவிபெற்ற) குறித்த விபரங்கள் ........................................................................................ | 15 |
| 15. | நிதிசார் முன்னேற்றம் (செலவினம் ) பற்றிய விபரங்கள் ............................ | 16 |
| 16. | நிதிசார் முன்னேற்றம் (வருமானம் ஈட்டப்பெற்ற) பற்றிய விபரங்கள் ............. | 16 |
| 17. | நிதிசார் செயலாற்றுகைப் பகுப்பாய்வு – 2013 ........................................ | 16 |
| 18. | 2013 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் பற்றிய விபரங்கள் ........................................................................................ | 17 |
| 19. | 2013 திசெம்பரில் உள்ளவாறு நிதிசார் நிலைமைக் கூற்று ........................ | 18 |
| 20. | 2013 திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த வருடத்திற்கான நிதிசார் செயலாற்றுகைக் கூற்று ............................................................... | 19 |
| 21. | 2013 திசெம்பர் 31ஆம் திகதியன்று முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று ........................................................................... | 20 |
| 22. | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை ............................................... | 22 |
| 23. | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில்கள் ........................ | 36 |

# 1. எமது தூர நோக்கு

2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையின் மூலவளத் தளத்துக்குப் பெறுமதிகூட்டுவதில் அறிவிலும் நிபுணத்துவத்திலும் புகழ்பெற்ற ஒரு மையமாகத் திகழ்தல்.

# 2. எமது பணிக் கூற்று

உள்நாட்டு மூலவளத் தளத்துக்குப் பெறுமதி கூட்டுதலுக்கு மிகுந்த முக்கியத்துவமளிக்கின்ற ஆராய்ச்சியிலும் கற்றலிலும் முதன்மைநிலை அடைந்தும் பட்டப்படிப்பு, பட்டப்பின்படிப்பு, சிறப்புத்துறை, கூட்டாண்மைத்துறை மற்றும் தொடர்கின்ற கல்விச் சந்தைகள் ஆகியவற்றினுள் பொருளாதார அபிவிருத்திக்கு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அணுகுமுறைகளைப் பயன்படுத்தும் ஆற்றலிலுள்ள தொழில்நுட்ப அணுகுமுறைகளைப் பயன்படுத்தும் ஆற்றலுள்ள முழு நிறைவான தலைவர்களை உருவாக்குதலும்.

## 3. துணைவேந்தரின் செய்தி

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகமானது, இலங்கையின் 14ஆவது தேசிய பல்கலைக்கழகமாக. 2005 ஜூன் முதலாம் திகதியன்று தாபிக்கப்பட்டது. நாட்டின் பொருளாதார அபிவிருத்தி குறித்த கேள்வியை பூர்த்திசெய்வதற்கான பல்கலைக்கழகமொன்றை கட்டியெழுப்புவதற்கான பரிசோதனையாகவே இது கருதப்படுகின்றது. தொழில் முனைப்புத் திறன்கள் மற்றும் ஈடுசெய் செயல்திறன்கள் கொண்ட பட்டதாரிகளை உருவாக்குதலைக் குறியாகக் கொண்ட இப் பல்கலைக்கழகம் நவீன கல்விசார் எண்ணக்கருக்களுடனான பாரம்பரிய பல்கலைக்கழக முறைமையினின்றும் வேறுபட்டு மிளிர்கின்றதெனலாம்.

தேசிய அபிவிருத்தி நோக்கிய பயனுறுதிமிக்க நடவடிக்கைகளைக் கோரும் சமூகத்திற்கு எமது இளமைமிக்க தொழில் முயற்சியாளர்கள் முகம் கொடுத்து நிபுணத்துவம் மிக்கவர்களாக மாறத்தக்க வகையில் நாம் அவர்களுக்கு அதிசிறந்த, சாத்தியமான அனைத்தையும் வழங்கி வருகின்றோம். அவர்களே இந்த எண்ணக்கருவின் கனிகளாக விளங்குவதுடன், இலங்கை உயர்கல்வி முறைமை பற்றிய சாதித்து ஆய்தல் நடவடிக்கையின் வெற்றிகரமான இறுதி உருவாக்கமுமாவர். பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டு வருடங்கள் பல கடந்த நிலையில், அந்த சாதித்து ஆய்தல் செயற்பாட்டின் பலனை எம்மால் இன்று உண்மையாக மதிப்பிடக் கூடியதாகவுள்ளது.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகமானது, பட்டதாரி மாணவ, பட்டதாரி, பட்டப்பின் கூட்டாண்மை மற்றும் தொடருறு கல்விச் சந்தைகளுக்குள்ளான பொருளாதார அபிவிருத்திக்கென விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் தொழில்முனைப்புத் திறன்களைப் பயன்படுத்தக்கூடிய தலைவர்களை உருவாக்கும் பொருட்டு, தேசிய வளங்களுக்கான பெறுமதி சேர்க்கை குறித்த ஆராய்ச்சி மற்றும் திடமான சொல்லமுத்தத்துடன் கூடிய கற்றலில் கருத்தூன்றி செயற்பட்டுவருகின்றது. 2013-2018 காலப்பகுதிக்கான செயற்திட்டத்துடன் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ள கூட்டாண்மைத் திட்டத்தின் (Corporate plan) முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கென விசேட கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. கூட்டாண்மைத் திட்டத்தை வருடம் முழுவதும் மீளாய்வு செய்வதற்கான கண்காணிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் பிரதான நோக்கங்களை அடைவதற்கென விருத்திசெய்யப்பட வேண்டிய பின்வரும் பிரதான விடயப் பரப்புக்களை இனங்கண்டுள்ளது.

- தேசிய மற்றும் பூகோள சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளில் தரம்வாய்ந்த இள மாணிப் பட்டக் கற்கை நிகழ்வுத் திட்டங்களை வழங்குதல்.
- பட்டதாரி மாணவர்களுக்கான தொழில் முனைப்புத் திறன்களை வழங்குதல்.
- பட்டதாரி மாணவர்களின் ஆங்கில மற்றும் தகவல் தொழில் நுட்பத் திறன்களை மிகுதிப்படுத்தல்.

- ➢ பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு மற்றும் எதிர்காலப் பலாபலன்களை விருத்தி செய்தல்.
- ➢ பட்டதாரி மாணவர்களின் மென்திறன்களை விருத்திசெய்தல்.
- ➢ விளையாட்டு மற்றும் உடற்கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்தல்.
- ➢ தரம் வாய்ந்த பட்டப்படிப்பின் கல்வி நிகழ்வுத் திட்டங்களை அறிமுகப்படுத்தல்.
- ➢ ஊழியர்களின் திறமைகள் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை விருத்திசெய்தல்.

குறித்த பீடங்கள் செயல் திட்டத்தில் தெளிவுறக் காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை தாமாகவே எடுத்துள்ளன. அதன் பிரகாரம் தற்போதுள்ள நிகழ்வுத் திட்ட பாடவிதான மீட்டல்களும், புதிய சுற்று நிருபங்களை அறிமுகப்படுத்தலும், பட்டப்படிப்பு நிகழ்வுத் திட்டத்தின் தரத்தை விருத்திசெய்யும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகமானது, அதிசயிக்கத்தக்க வகையில் காண்போர் மனங்களைக் கவர்ந்திழுக்கும் வண்ணம் பரந்த காட்சியுடன் கூடிய மலைச்சாரலில் அமைந்துள்ள பதுளை மாநகரின் இதயப் பகுதியில் 59 ஏக்கர் நிலப் பரப்பில் வியாபித்துள்ளது.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகமானது, உள்நாட்டு மற்றும் பூகோளத் தேவைகளை நிவர்த்தி செய்யும் பல்துறைப்பட்ட நிகழ்வுத் திட்டங்களை வழங்கிவரும் மூன்று பீடங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

### 1. விலங்கு விஞ்ஞான, ஏற்றுமதி விவசாய பீடம்

- i. விலங்கு விஞ்ஞானம்
- ii. ஏற்றுமதி விவசாயம்
- iii. தேயிலைத் தொழில்நுட்பமும் பெறுமதிச் சேர்ப்பும்
- iv. நீரியல் வளங்கள் மற்றும் தொழில் நுட்பம்
- v. பனை மற்றும் இறப்பர்பால் தொழில்நுட்பம் மற்றும் பெறுமதிச் சேர்ப்பும்

### 2. விஞ்ஞான, தொழில்நுட்பப் பீடம்

- I. விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
- II. கணினி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
- III. கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம்
- IV. கனிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும்

### 3. முகாமைத்துவப் பீடம்

- i. தொழில் முயற்சியாண்மையும் முகாமைத்துவமும்
- ii. விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்வுகள் முகாமைத்துவம்

மாணவர்களின் தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்வதற்கான கட்டாய நிகழ்வுத் திட்டங்கள் கிடைக்கப்பெறும் நிலையில் உள்ளன.

பல்கலைக்கழகப் பட்ட நிகழ்வுத் திட்டங்களானவை அந்தந்தத் துறைகளினால் வழங்கப்பட்டு வரும் பாடங்களுக்கோ அல்லது கற்கைநெறியின் தனித்தனியான சிறிய பகுதிகளுக்கோ வரையறுக்கப்படுவதில்லை.
நன்கு நிருவகிக்கப்பட்டுவரும் விடுதி வசதிகள் மூலம் கணிசமான எண்ணிக்கை கொண்ட மாணவர்கள் பயனடைந்ததுடன், அவர்களின் கற்கைகளுக்கான நல்லதோர் சூழலும் அமைந்துள்ளதெனலாம். பல்கலைக்கழகமானது, வதிவிடப் பல்கலைக்கழகமொன்றுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குவதன் மூலம் கலாசார மற்றும் ஒழுக்க விழுமியங்களை மாணவர் மனங்களில் பதிய வைப்பதற்கான தகுந்த சூழலொன்றை விருத்தி செய்திட முயன்று வருகின்றது. அனைத்து கல்விசார் உத்தியோகத்தர்களும் கல்விச் செயற்பாடுகள், ஆராய்ச்சி மற்றும் கூட்டாண்மை சமூகப் பொறுப்புடைமைகள் ஆகிய மூன்று அடுக்குச் சேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியவர்களாகவுள்ளனர்.

பல்கலைக்கழகத்தில் உள்ள பதவியினர் அபிவிருத்தி மத்திய நிலையமானது(Staff Development Centre) பல்கலைக் கழகத்தில் இணைந்து கொள்ளும் இளம் கல்விசார் பதவியினரைப் பயிற்றுவிக்கும் கடைப்பாட்டினைக் கொண்டுள்ளது. ஆராய்ச்சியாளர்கள் பாதீட்டு நெருக்கடிகளுக்கான கண்டறிதல்களை ஆராய்ச்சி சமூகத்திற்கு முன்னளிக்கை செய்து தங்கள் தொழிலை ஆரம்பிக்கும் பொருட்டு, குறுகிய காலப் பகுதி ஒன்றுக்குள் ஆராய்ச்சி அமர்வுகள் நடாத்தப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக ஆராய்ச்சியானது தேசிய வளங்கள் அபிவிருத்தி மற்றும் சமூக சேமநலம் ஆகியவற்றுக்கு நேரடியாகவே பங்களிப்பை வழங்கி வருகின்றதெனலாம்.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் தூர நோக்கு மற்றும் பணி இலக்கு ஆகியவை தெளிவாக உள்ளதுடன், அவற்றை அக்கறையுடையோர் அனைவரும் நன்கு அறிந்துதே வைத்துள்ளனர். கூட்டாண்மைத் திட்டத்தில் வெவ்வேறு செயற்பாடுகளுக்கென அனைத்துப் பொறுப்படைமைகளும் தெளிவாக இனங்காணப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழகத்தினால் நிதிசார் வளங்கள் பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்தப்பட்டும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கலாநிதி. ஜீ. சந்திரசேன
துணைவேந்தர்
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

## 4. மனித வளங்கள் மற்றும் மாணவர்கள்


| பீடம் | கற்கை நெறி | மாணவர்கள் மொத்த எண்ணிக்கை | கல்விசார் பதவியினரின் மொத்த எண்ணிக்கை | கல்விசாராப் பதவியினரின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| விலங்கு விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாயம் | விலங்கு விஞ்ஞானம் | 169 | 58 | அனைத்து மூன்று பீடங்கள் மற்றும் பொது நிருவாகம் ஆகியவற்றினால் பகிர்ந்துகொள்ளப்பட்டவர்களாக 71 கல்விசாராப் பதவியினரும் 13 நிருவாகப் பதவியினரும் இருந்தனர். |
| | ஏற்றுமதி விவசாயம் | 159 | | |
| | தேயிலை தொழில்நுட்பம் பெறுமதி சேர்ப்பும் | 149 | | |
| | நீரியல் வளங்கள் தொழில்நுட்பம் | 166 | | |
| | பனை மற்றும் இறப்பர்பால் தொழில்நுட்பம் மற்றும் பெறுமான சேர்ப்பும் | 152 | | |
| விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | 175 | 55 | |
| | கணினி விஞ்ஞானம் தொழில்நுட்பம் | 201 | | |
| | கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் | 169 | | |
| | கனிப்பொருள் வளங்கள் மற்றும் தொழில்நுட்பம் | 151 | | |
| முகாமைத்துவம் | தொழில் முயற்சியாண்மை மற்றும் முகாமைத்துவம் | 202 | 29 | |
| | விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்வுகள் முகாமைத்துவம் | 200 | | |
| **மொத்தம்** | | **1893** | **142** | |

## 5. மாணவர்கள் சேர்க்கை விபரங்கள்


ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு பட்டப்படிப்பு நிகழ்வுத்திட்டத்திற்குமென 55 மாணவர்களை உள்ளீர்த்து வருகின்றது. அவர்கள் க.பொ.த (உயர்தர) பரீட்சையிலும், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பெற்ற பொது உளச்சார்பு பரீட்சையிலும் காண்பித்த திறமையின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டனர்.

| பீடம் | கற்கைநெறி | மொழிமூலம் | முதலாம் வருட மாணவர்கள் (2011/2012) | 2ஆம் வருட மாணவர்கள் (2010/2011) | 3ஆம் வருட மாணவர்கள் (2009/2010) | 4ஆம் வருட மாணவர்கள் (2008/2009) | பட்டதாரிகளின் எண்ணிக்கை (2007/2008) |
|---|---|---|---|---|---|---|---|
| விலங்கு விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாயம் | விலங்கு விஞ்ஞானம் | ஆங்கிலம் | 47 | 44 | 37 | 41 | 36 |
| | ஏற்றுமதி விவசாயம் | | 45 | 38 | 37 | 39 | 38 |
| | தேயிலை தொழிற்நுட்பம் மற்றும் பெறுமான சேர்ப்பும் | | 26 | 41 | 41 | 41 | 40 |
| | நீரியல் வளங்கள் தொழில்நுட்பம் | | 36 | 40 | 42 | 48 | - |
| | பனை மற்றும் இறப்பர்பால் தொழில்நுட்பம மற்றும் பெறுமான சேர்ப்பும் | | 24 | 46 | 36 | 46 | - |
| விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | | 51 | 43 | 46 | 35 | 38 |
| | கணினி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | | 67 | 48 | 44 | 42 | 43 |
| | கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் | | 40 | 45 | 45 | 39 | 41 |
| | கனிப்பொருள் வளங்கள் மற்றும் தொழில்நுட்பம் | | 32 | 43 | 38 | 38 | 49 |
| முகாமைத்துவம் | தொழில்முயற்சியாண்மை மற்றும் முகாமைத் முகாமைத்துவமும் | | 54 | 49 | 46 | 53 | 52 |
| | விருந்தோம்பல் சுற்றுலாத் துறை மற்றும் நிகழ்வுகள் முகாமைத்துவம் | | 57 | 47 | 48 | 48 | - |
| **மொத்தம்** | | | **479** | **484** | **460** | **470** | **337** |

## 2013 ஆம் ஆண்டிற்கான புதிதாக சேர்க்கப்பட்ட மாணவர்களின் பால்நிலைப் பகிர்வு (2011/2012 பிரிவு)



## 2013 ஆம் ஆண்டில் பட்டம்பெற்ற மாணவர்களின் பால்நிலைப் பகிர்வு (2007/2008 பிரிவு)



# 6. கல்விசார் பதவியினர்

## 6.1. 2013ஆம் ஆண்டில் சேவையாற்றிய கல்விசார் பதவியினர் குறித்த விபரங்கள்

<table>
<tr><th>பீடம்</th><th>விடயப் பரப்பு</th><th>மொழி மூலம்</th><th>சிரேஷ்ட பேராசிரியர்கள்</th><th>பேராசிரியர்கள்</th><th>சிரேஷ்ட விரிவுரையாளர்கள்</th><th>விரிவுரையாளர்கள்</th><th>தகுதிகாண் விரிவுரையாளர்கள்</th><th>தற்காலிக விரிவுரையாளர்கள் / வழிப்படுத்துநர்கள்</th></tr>
<tr><td rowspan="5">விலங்கு விஞ்ஞானமும் ஏற்றுமதி விவசாயமும்</td><td>விலங்கு விஞ்ஞானம்</td><td rowspan="11">ஆங்கிலம்</td><td rowspan="5">-</td><td rowspan="5">-</td><td rowspan="5">02 (01)</td><td rowspan="5">04</td><td rowspan="5">26</td><td rowspan="5">25</td></tr>
<tr><td>நீரியல் வளங்கள் தொழில்நுட்பம</td></tr>
<tr><td>தேயிலை தொழிற்நுட்பம் மற்றும் பெறுமான சேர்ப்பும்</td></tr>
<tr><td>பனை தாவரப்பால் தொழில்நுட்பம் மற்றும் பெறுமாக சேர்ப்பும்</td></tr>
<tr><td>ஏற்றுமதி விவசாயம்</td></tr>
<tr><td rowspan="4">விஞ்ஞானமும் தொழில்நுட்பம்</td><td>விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம்</td><td rowspan="4">-</td><td rowspan="4">-</td><td rowspan="4">08</td><td rowspan="4">01</td><td rowspan="4">28</td><td rowspan="4">18</td></tr>
<tr><td>கணினி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்</td></tr>
<tr><td>கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம்</td></tr>
<tr><td>கனிப்பொருள் வளங்கள் மற்றும் தொழில்நுட்பம்</td></tr>
<tr><td rowspan="3">முகாமைத்துவம்</td><td>தொழில் முயற்சியாண்மை மற்றும் முகாமைத்துவமும்</td><td rowspan="3">-</td><td rowspan="3">-</td><td rowspan="3">03</td><td rowspan="3">03</td><td rowspan="3">16</td><td rowspan="3">07</td></tr>
<tr><td>விருந்தோம்பல் சுற்றுலாத்துறை மற்றும் நிகழ்வுகள் முகாமைத்துவம்</td></tr>
<tr><td>பரந்தளவிலான பொதுக் கல்வி மற்றும் அத்தியாவசிய திறன்கள்</td><td>ஆங்கிலம்/ சிங்களம்/ தமிழ்</td></tr>
<tr><td colspan="2">மொத்தம்</td><td></td><td>-</td><td>-</td><td>13 (01)</td><td>08</td><td>70</td><td>50</td></tr>
</table>

தற்காலிக சிரேஷ்ட விரிவுரையாளர்கள் அடைப்புக்குறிகளினுள் () காட்டப்பட்டுள்ளனர்

## 6.2. நூலகப் பதவியினர்

**திருமதி. கே.எம்.ஆர்.கே.குலதுங்க**, BA. (பேராதனை தொலைக்கல்வியில் பட்டப்பின் டிப்ளோமா (இந்தியா) M.LIS (டில்லி), உதவி நூலகர் (25.07.2013) தொடக்கம் கற்கை வகுப்பில் உள்ளார்)

**திருமதி. டி.பீ.சீ.விதான,** Bsc (ஸ்ரீ ஜெயவர்த்தனபுர) – உதவி நூலகர்

**திருமிகு. வு.பிரதீபன்,** BEcon (கிழக்குப்பல்கலைக்கழகம்), M.Sc LI (இந்தியா)- உதவி நூலகர் (01.12.2013 தொடக்கம் கற்கை விடுப்பில் உள்ளார்)

# 7. நிருவாக மற்றும் கல்விசாராப் பதவியினர்

## 7.1. நிருவாகப் பதவியினர்

2013ஆம் ஆண்டிற்கான ஒவ்வொரு பதவி வகையிலும் சேவையாற்றிய நிருவாகப் பதவியினரின் எண்ணிக்கை பின்வருமாறு

| பதவி வகை | பதவியின் எண்ணிக்கை |
|---|---|
| பதிவாளர் | 01 |
| சிரேஷ்ட உதவிப் பதிவாளர் | 03 |
| சிரேஷ்ட உதவி நிதியாளர் | 03 |
| சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் | 01 |
| உதவிப் பதிவாளர் | 02 |
| உதவி நிதியாளர் | 01 |
| பல்கலைக்கழக மருத்துவ அலுவலர் | 01 |
| கருத்திட்ட முகாமையாளர் (ஒப்பந்த அடிப்படையில்) | 01 |

நிதியாளர், பிரதம பாதுகாப்பு அலுவலர் மற்றும் உடற்கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகள் வெற்றிடங்களாக இருந்தன.

## 7.2. ஆதரவுப் பதவி அணியினர்

தொழில்நுட்ப ஆலுவலர்களின் சேவைகள் தவிர்ந்த எழுது வினைஞர் மற்றும் அதனையொத்த தரங்களைச் சேர்ந்த பதவி அணியினரின் அனைத்து சேவைகளும் செயற்பாட்டு உதவியாளர்களாக(operations Assistant) உரித்தீட்டு அடிப்படையில் (Assignment basis) பின்னர் நியமிக்கப்பட்ட பயிலுநர்கள் மூலம் பெறப்பட்டன. செயற்பாட்டு உதவியாளர்கள் கணினி தொடர்பான பணி, எழுத்துப்பணி, செயற்பபாட்டுப்பணி மற்றும் செயலகப் பணி உள்ளிட்ட பெருமளவிலான செயற்பாடுகளைப் பூர்த்தி செய்து வருகின்றனர். ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகமானது செயற்பாட்டு வெற்றியை இலக்காகக் கொண்டே நடத்தப்பட்டதுடன், செயற்பாட்டு உதவியாளர்கள் தங்கள் திறன்களைக் காண்பித்தும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் மூலோபாய வெற்றியை நிரூபித்துள்ளனர்.

அனைத்து நியமனதாரிகளும் ஊவா மாகாணத்தைச் சேர்ந்தவர்களாக இருந்ததுடன், பல்கலைகழகத்திற்கு அருகாமையில் வசித்தும் வருகின்றனர். அனைத்து கல்விசாரா மற்றும் ஆதரவுப் பதவி அணியினரின் வகை மற்றும் எண்ணிக்கை ஆகியவை கீழே தரப்பட்டுள்ளன.

| பதவி வகை | பதவியினர் எண்ணிக்கை |
|---|---|
| தொழிற்நுட்ப அலுவலர் | 02 |
| கணினி பிரயோகங்கள் உதவியாளர் (CAA) (அமைய) | 04 |
| செயற்பாட்டு உதவியாளர்கள் (உரித்தீட்டு அடிப்படையில்) | 20 |
| பயிலுநர்கள் | 43 |
| களஞ்சியக் காப்பாளர் | 01 |
| காசாளர் | 01 |

மேலும் உப விடுதிக் காப்பாளர்கள் இருவர் மற்றும் விளையாட்டு அலுவலர் ஒருவரினதும் சேவைகள் வெளியக சேவை வழங்குநர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன.

## 7.3. ஆதரவுப் பதவியினரின் பகிர்வு

| பீடம்/கிளை | அதி சிரேஷ்ட | சிரேஷ்ட பதவியினர் | கனிஷ்ட பதவியினர் (பயிலுநர்) | சிற்றூழியர்கள் |
|---|---|---|---|---|
| துணைவேந்தர் அலுவலகம் | - | 01 | 01 | எவருமில்லை* |
| பதிவாளர் அலுவலகம் | - | 01 | 01 | |
| மிருக விஞ்ஞான மற்றும் ஏற்றுமதி விவசாய பீடம் | - | 04(01**) | 01 | |
| விஞ்ஞான மற்றும் தொழிற்நுட்ப பீடம் | - | 03(01**) | 06 | |
| முகாமைத்துவ பீடம் | - | - | 02 | |
| மாணவர் சேமநலப் பிரிவு | - | 03 | 03 | |
| மனிதவளப் பிரிவு | - | 01 | 02 | |
| பொது நிருவாகப் பிரிவு | - | 03 | 01 | |
| கணக்காய்வாளர் அலுவலகம் | - | 03 | 05 | |
| பெறுகைப் பிரிவு | - | 01 | 02 | |
| சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் அலுவலகம் | - | 02 | | |
| நிதிசார் பிரிவு | - | (02***) | 07 | |
| நூலகம் | - | 01 | 10 | |
| மருத்துவ நிலையம் | - | 01 | - | |
| கருத்திட்ட உதவிகள் | - | - | 02 | |
| **மொத்தம்** | - | **28** | **43** | |

* பல்கலைக்கழக சிற்றூழியர் எவரையும் நியமிக்கவில்லை, சிற்றூழியர்களின் சேவைகள் சேவை வழங்குநர்களிடமிருந்தே பெற்றுக்கொள்ளப்பட்டன.

** தொழில்நுட்ப உதவியாளர்கள் (02)

*** இளங்காசாளர் மற்றும் களஞ்சியக் காப்பாளர் (02)

## 8. ஆராய்ச்சி, புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகள்

2013 ஆம் வருட காலத்திலான பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி, புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள்

| விடயம் | வெளியிடப்பட்டவை | வணிகமயப் படுத்தப்பட்டவை | முன்னளிக்கை செய்யப்பட்டவை |
|---|---|---|---|
| ஆராய்ச்சிக் கற்கைகள் எண்ணிக்கை | - | - | 23 |
| புத்தாக்கங்கள்/உற்பத்தி அபிவிருத்தி எண்ணிக்கை | - | - | - |
| பருவ இதழ் கட்டுரைகள் எண்ணிக்கை | 17 | - | - |
| நூல்கள்/நூல் அத்தியாயங்கள் எண்ணிக்கை | 10 | - | - |
| கட்டுரைச் சுருக்கங்கள் | 254 | - | - |
| சுவரொட்டிகள் | 14 | - | - |
| **மொத்தம்** | **295** | **-** | **23** |

## 9. நிகழ்வுத்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமா்வுகள

| விடயம் | பங்கேற்பு / வழங்கப்பட்டவை | பூரணப்படுத்தப்பட்டவை | முன்னளிக்கை செய்யப்பட்டவை |
|---|---|---|---|
| பல்கலைக்கழகப் பட்ட நிகழ்வுத் திட்டங்களின் எண்ணிக்கை | 11 | 11 | - |
| சான்றிதழ் நிகழ்வுத்திட்டங்களின் எண்ணிக்கை | 02 | 02 | - |
| சமுதாய சேவை வழங்கல் நிகழ்வுத்திட்டங்களின் எண்ணிக்கை | 23 | 23 | - |
| பதவியினா் அபிவிருத்தி கத்தரங்குகள் மற்றும் செயலமா்வுகள் | 73 | 73 | - |
| **மொத்தம்** | **109** | **109** | - |

## 10. கிடைக்கப்பெற்றுள்ள விருதுகள் குறித்த விபரங்கள்

| விடயம் | விருதுகள் எண்ணிக்கை | கல்விசார் பதவியினர் எண்ணிக்கை | மாணவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| உள்நாட்டு விருதுகள் | - | - | - |
| சர்வதேச விருதுகள் | 04 | 04 | - |
| **மொத்தம்** | **04** | **04** | **-** |

## 11. மீண்டுவரும் செலவினம் குறித்த விபரங்கள

ரூபா

| விடயம் | 2013 | 2012 |
|---|---|---|
| அ. தனிநபர் வேதனாதிகள் | 121,219,347 | 103,926,933 |
| ஆ. பிரயாணம் | 1,957,928 | 306,598 |
| இ. வழங்கல்கள் | 9,467,163 | 12,658,833 |
| ஈ. பராமரிப்பு | 1,817,403 | 1,922,439 |
| உ. ஒப்பந்த சேவைகள் | 112,870,761 | 92,899,422 |
| ஊ. ஏனையவை | 17,578,202 | 12,487,045 |
| **மொத்தம்** | **264,910,804** | **224,201,270** |

## 12. மூலதன செலவினம் குறித்த விபரங்கள

ரூபா

| விடயம் | 2013 | 2012 |
|---|---|---|
| அ. தளபாட மற்றும் ஏனைய உபகரணக் கையகப்படுத்துகை | 73,806,688 | 10,528,406 |
| ஆ. இயந்திராதிகள் கையகப்படுத்துகை | 2,447,744 | 55,781,073 |
| இ. கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் கையகப்படுத்துகை | 184,604,627 | 112,810,708 |
| ஈ. ஏனையவை | 2,978,366 | 1,930,696 |
| **மொத்தம்** | **263,837,425** | **181,050,883** |

## 13. கருத்திட்ட (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியீட்டம்) விபரங்கள்

ரூபா.மில்லியன்

| பெயர்/விபரங்கள் | கடன்/ மானியம் | நிதியளிப்பு முகவரமைப்பு # | TCE | RFA | DF |
|---|---|---|---|---|---|
| ஊவா வெல்லஸ்ஸ பகல்கலைக்கழக கருத்திட்ட கட்டம் 1 மற்றும் 2 ஆகியவற்றின் ஸ்தாபகம் | - | - | 3,420.00 | - | ✓ |
| ஆடைத் தொழிற்சாலை கட்டட புனரமைப்பு | - | - | 53.96 | - | ✓ |
| **மொத்தம்** | - | - | **3,473.96** | - | - |

## 14. கருத்திட்ட செலவினம் (உள்ளூர் /வெளிநாட்டு நிதியீட்டம்)

ரூபா.மில்லியன்

| பெயர் | TCE | 2012இல் ஏற்பட்ட செலவினம் | 2013இல் ஏற்பட்ட செலவினம் | 31.12.2013இல் உள்ளவாறான ஒட்டு மொத்த செலவினம் | % பௌதிக முன்னேற்ற சதவீதம் |
|---|---|---|---|---|---|
| ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக கருத்திட்ட, கட்டம் 1 மற்றும் 2 ஆகியவற்றின் ஸ்தாபகம் | 3,420.00 | 110.81 | 184.60 | 1,836.28 | 60% |
| ஆடைத்தொழிற்சாலைக் கட்டட புனரமைப்பு | 53.96 | 0.87 | - | 41.24 | 95% |
| **மொத்தம்** | **3,473.96** | **111.68** | **184.60** | **1,877.52** | **-** |

## 15. நிதிசார் முன்னேற்றம் குறித்த விபரங்கள் (செலவினம்)

ரூபா

| விடயம் | 2013இல் ஏற்பாடு ரூபா | 2013இல் செலவினம் ரூபா | சேமிப்புக்கள்/ (மிகை) |
|---|---|---|---|
| அ. கருத்திட்டம் தவிர்ந்த மீண்டுவரும் செலவினம் | 335,749,000 | 264,910,805 | 70,838,195 |
| ஆ.கருத்திட்டம் தவிர்ந்த மூலதன செலவினம் | 170,790,000 | 80,151,920 | 90,638,080 |
| இ. கருத்திட்டம் உள்நாட்டு நிதியீட்டம் செலவினம் | 220,000,000 | 184,604,627 | 35,395,373 |
| ஈ. கருத்திட்டம், வெளிநாட்டு நிதியீட்டம் செலவினம் | - | - | - |
| **மொத்தம்** | **726,539,000** | **529,667,352** | **196,871,648** |

## 16. நிதிசார் முன்னேற்றம் (உருவாக்கப்பட்ட வருமான விபரங்கள்)

ரூபா

| வருமான வழிகள் | 2013இல் ஏற்பாடு | 2013இல் சேகரிப்பு | பற்றாக்குறை / மிகை |
|---|---|---|---|
| அ. பட்டப்படிப்புக்கள் (விடுதி மற்றும் பதிவுக்கட்டணங்கள் முதலியன) | 6,330,000 | 13,191,742 | 6,861,742 |
| ஆ. பட்டப்பின் படிப்புக்கள் | - | - | - |
| இ. ஆலோசனை வழங்கல் (பயிற்சி, பரீட்சை மற்றும் ஏனையவை) | 3,315,000 | 553,000 | (2,762,000) |
| ஈ. ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **9,645,000** | **13,744,742** | **4,099,742** |

## 17. நிதிசார் செயலாற்றுகைப் பகுப்பாய்வு – 2013

ரூபா

| விடயம் | சூத்திரம் | செலவினம் |
|---|---|---|
| அ. மாணவர் ஒருவருக்கான மீண்டுவரும் செலவினம் (மீ.செ) | மீசெ/மாணவர் எண்ணிக்கை | 139,942.32 |
| ஆ. மாணவர் ஒருவருக்கான மூலதன செலவினம் (மூசெ) | மூ.செ/மாணவர் எண்ணிக்கை | 42,341.22 |
| **மொத்தம்** | | **182,283.53** |

* (தேய்மானம் மற்றும் மாணவர்களுக்கான நிதியுதவி உட்பட)

## 18. 2013 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற உட்கட்டமைப்பு வசதிகள் குறித்த விபரங்கள்

| உட்கட்டமைப்பு விபரங்கள் | செலவினம் (ரூபா) | பௌதிக முன்னேற்றம் |
|---|---:|---:|
| DEF கட்டடத்தொகுதிக்கான நார்ப்பொருள் வலையமைப்பு | 1,266,259.16 | 80% |
| கட்டடத்தொகுதி "E" வலையமைப்பு | 19,279,637.95 | 90% |
| கட்டடத்தொகுதி "F" வலையமப்பு | 1,043,424.88 | 90% |
| கட்டடத்தொகுதி "D" வலையமைப்பு | 3,994,488.90 | 90% |
| பராமரிப்புக் கட்டடம் | 37,278.00 | 10% |
| சிரேஷ்ட பதவியினர் விடுதி | 26,412,699.50 | 80% |
| பதவியினர் விடுதி (கலையக விடுதி) | 38,064,917.35 | 80% |
| வீதிகள் மற்றும் நிலத்தோற்றம் | 16,573,803.63 | 60% |
| தேநீர்ச்சாலை மற்றும் மலசல கூடங்கள் | 11,932,152.68 | 90% |
| மூதவைக் கட்டடம் | 60,957,125.25 | 40% |
| பல்கலைக்கழக விருந்தினர் விடுதி | 1,458,838.92 | 90% |

## ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

## 19. 2013 டிசெம்பரில் உள்ளவாறான நிதிநிலைமை குறித்த அறிக்கை

| | 2013<br>ரூபா . | 2012<br>ரூபா . |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| **நடைமுறைச்சொத்துக்கள்** | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவையும | 1,335,207 | 9,429,410 |
| கிடைக்கப்பெறக் கூடியவை சொத்துப்பதிவேடுகள் | 14,534,698 | 19,245,531 |
| சொத்துப் பதிவேடுகள் | 5,431,453 | 2,858,782 |
| முற்பணங்கள் | 198,262 | 96,000 |
| | 21,499,621 | 31,629,723 |
| **நடைமுறையற்ற சொத்துக்கள** | | |
| கிடைக்கப்பெறக்கூடியவை | 5,602,480 | 4,682,456 |
| சொத்து, இயந்திர சாதன மற்றும் உபகரணம் | 1,290,305,122 | 1,326,976,268 |
| வளர்ச்சிகண்டுவரும் பணி | 365,641,418 | 181,036,791 |
| காணி சுவீகரிப்பு | 53,016,399 | 53,016,399 |
| தர முன்னேற்றக் கருத்திட்டங்கள் | 1,206,090 | - |
| | 1,715,771,509 | 1,565,711,914 |
| **மொத்த சொத்துக்கள்** | 1,737,271,130 | 1,597,341,638 |
| **பொறுப்புக்கள்** | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| அட்டுறு செலவுகள் | 39,129,463 | 7,839,588 |
| நானாவித கடன் வழங்குநர்கள் மற்றும் ஏனையோர் | 111,221,850 | 99,909,803 |
| | 150,351,313 | 107,749,391 |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | |
| தாமதப்படுத்தப்பட்ட வருமானம் | 133,457,306 | 107,596,853 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | 6,813,256 | 5,824,388 |
| | 140,270,561 | 113,421,241 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 290,621,875 | 221,170,632 |
| **நிகர சொத்துக்கள்** | 1,446,649,255 | 1,376,171,005 |
| **நிகர சொத்துக்கள் /சம உரிமையாண்மை** | | |
| ஒட்டுமொத்த நிதி (மூலதனம்) | 1,831,042,417 | 1,666,874,277 |
| பொது ஒதுக்கம் | (394,580,896) | (297,801,450) |
| விசேட ஒதுக்கம் | 1,830,484 | 3,976,032 |
| விசேட மூலதனங்கள் (நிதிகள்) | 8,357,250 | 3,122,145 |
| **மொத்த நிகர சொத்துக்கள்/ சம உரிமையாண்மை** | 1,446,649,255 | 1,376,171,005 |

## 20. 2013 டிசெம்பர் 31இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிசார் செயலாற்றுகை குறித்த அறிக்கை

| | 2013<br>ரூபா | 2012<br>ரூபா |
|---|---|---|
| **வருமானம்** | | |
| மீண்டுவரும் மூலதனம் | 203,000,000 | 233,700,000 |
| உதவிக் கொடுப்பனவும் மஹாபொல மானியங்களும் | 21,108,150 | 22,292,150 |
| சுய நிதி நிகழ்வுத்திட்ட வருமானம் | 553,000 | 1,791,277 |
| ஏனைய வருமானம் | 13,191,742 | 8,593,589 |
| நிலைமாறக்கூடிய மூலதன மானியங்கள் | 40,788,873 | 34,719,487 |
| **மொத்த வருமானம்** | **278,641,766** | **301,096,502** |
| **செலவுகள்** | | |
| ஆளணி வேதனாதிகள் | 121,219,347 | 103,926,933 |
| பிரயாணச் செலவுகள் | 1,957,928 | 306,598 |
| வழுங்கல்கள் | 9,467,163 | 12,658,833 |
| பராமரிப்பு | 1,817,403 | 1,922,439 |
| ஒப்பந்தம்சார் செலவினம் | 112,870,761 | 92,899,422 |
| ஏனைய மீண்டு வரும் செலவுகள் | 17,578,202 | 12,487,045 |
| சுயநிதி நிகழ்வுத்திட்ட செலவுகள் | 418,496 | 1,546,238 |
| மாணவர் உதவு தொகை மற்றும் மஹாபொல கொடுப்பனவுகள் | 21,108,150 | 22,292,150 |
| தேய்மானம் | 115,616,976 | 108,628,465 |
| **மொத்தச் செலவுகள்** | **402,054,427** | **356,668,123** |
| **காலப்பகுதிக்கான மிகை/பற்றாக்குறை** | (123,412,661) | (55,571,620) |

## 21. 2013 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் அறிக்கை

| | 2013<br>ரூபா | 2012<br>ரூபா |
|---|---|---|
| **இயங்குநிலைச் செயற்பாடுகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| சாதாரண செயற்பாடுகளில் இருந்தான பற்றாக்குறை /மிகை | (123,412,661) | (55,571,620) |
| **காசு நகர்வுகள் சேராதவை** | | |
| நிலைமாற்றமுற்ற மூலதன மானியங்கள் | (40,788,873) | (34,719,487) |
| தேய்மானம் | 115,616,976 | 108,628,465 |
| ஏற்பாடுகள் மற்றும் ஏனையவை | 2,294,002 | 2,205,825 |
| **W/C யிலான மாற்றங்களுக்கு முன்னரான இயங்கு நிலை இலாபம்** | **(46,290,557)** | **20,543,183** |
| கிடைக்கப்பெற வேண்டியவையிலான (அதிகரிப்பு) குறைவு (CA) | 4,710,833 | (3,851,417) |
| கிடைக்கப்பெற வேண்டியவையிலான (NCA)- (அதிகரிப்பு)/குறைவு) | (920,023) | (4,682,456) |
| சொத்துப்பதிவேடுகளிலான (அதிகரிப்பு)/குறைவு) | (2,572,671) | 1,985,325 |
| முற்பணத்திலான அதிகரிப்பு /குறைவு | (102,263) | 1,509,352 |
| அட்டுறு செலவவுகளிலான (அதிகரிப்பு/குறைவு) | 31,289,875 | (1,456,013) |
| நானாவித கடன் வழங்குநர்களில் ஏற்பட்ட (அதிகரிப்பு/குறைவு) | 11,312,047 | 38,391,343 |
| **இயங்குநிலை செயற்பாடுகளில் இருந்தான நிகர காசுப்பாய்ச்சல்கள்** | **(2,572,758)** | **52,439,317** |
| **முதலீட்டுச் செயற்பாடகளில் இருந்தான நிகர காசுப் பாய்ச்சல்கள்** | | |
| நிலையான சொத்துக்கள் கையகப்படுத்துகை | (264,756,547) | (181,050,883) |
| **முதலீட்டுச் செயற்பாடகளில் இருந்தான நிகர காசுப் பாய்ச்சல்கள்** | (264,756,547) | (181,050,883) |
| **நிதியீட்டுச் செயற்பாடுகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| ஒட்டுமொத்த நிதி | 187,350,674 | 95,758,603 |
| தாமதப்படுத்தப்பட்ட வருமானம் | 66,649,326 | 40,241,396 |
| ஏனைய நிதிகள் | 5,235,103 | 369,666 |
| பொது ஒதுக்கம் | - | (4,875) |
| **நிதியீட்டுச் செயற்பாடுகளில் இருந்தான நிகர காசுப் பாய்ச்சல்** | **259,235,103** | **136,364,790** |
| காசு மற்றும் காசுக்கு சமமானவற்றிலான நிகர அதிகரிப்பு/ குறைவு | (8,094,203) | 7,753,224 |
| குறித்த காலப்பகுதி தொடக்கத்திலான காசும் காசுக்குச் சமமானவைகளும் | 9,429,410 | 1,676,186 |
| **காலப்பகுதி முடிவிலான காசும் காசுக்குச் சமமானவையும்** | **1,335,207** | **9,429,410** |

குறிப்பு - 31.12.2013 அன்று உள்ளவாறான வங்கிக் கணக்கு மீதிகள்

| வங்கி | கணக்கு இலக்கம் | தொகை (ரூபா) |
|---|---|---|
| இலங்கை வங்கி | 3114820 | 55,152 |
| இலங்கை வங்கி | 3114828 | 51,746 |
| மக்கள் வங்கி | 10100168384805 | 1,228,310 |
| மொத்தம் | | **1,335,207** |

## 22. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර් මේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிப திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. யுவீ/பீடீ/டீ/யுட்பிள்யுயு/1/13/78 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2015 சனவரி 30 |

உபவேந்தர்,

இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

**இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 108(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை பல்கலைக்கழக உபவேந்தருக்கு 2014 யூலை 23 ஆம் திகதி வழங்கப்பட்டது.

1.2 **நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

2013 ஆம் ஆண்டிற்காக பெறவேண்டிய மாணவர் உதவி மற்றும் முற்பணக் கணக்கின் மீதி ரூபா 3,611,200 ஆகக் காணப்பட்டதுடன் இது நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பட்டோலையில் ரூபா 3,781,521 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 170,321 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2007/2008 மற்றும் 2008/2009 கல்வி ஆண்டுகளின் போது விடுதிகளில் தங்கியிருந்து இறுதியாண்டு பரீட்சைக்குத் தோற்றியதை அடுத்து பல்கலைக்கழகத்திலிருந்து விலகிச்சென்ற 98 மாணவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய விடுதிக் கட்டணம் ரூபா 59,870 தொகையும் மிகைஅறவீட்டுக் கட்டணத்தொகையான ரூபா 365,677 தொகையும் 2014 மே 26 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து இப் பல்கலைக்கழகத்திற்கு இடமாற்றம் பெற்றுவந்த பேராசிரியர் ஒருவருக்கு 2011 சனவரி முதல் யூலை வரையான காலப்பகுதிக்காக மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 93,546 தொகையான ஆராய்ச்சிக் கொடுப்பனவு பேராதனைப் பல்கலைக்கழகத்திடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,753,253 தொகையான இடர் கடன் மீதியில் 2007, 2008 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போது மூன்று உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 238,275 கூட்டுத்தொகையான இடர் கடன் மீதி 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) நிதிக்கூற்றுக்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 108,000 தொகையான விழா முற்பணக் கடன் மீதியில் 2010, 2011 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் ஏப்ரல் மாதத்தின் போது வழங்கப்பட்ட ரூபா 11,000 தொகையான விழா முற்பணக் கடன் மீதி அறவிடப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்கு மீதிகளின் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| பெறவேண்டிய பிணை வைப்புக்கள் | 3,325,000 | பிணைமுறிகள் |
| ஊழியர் பிணை | 50,000 | ஊழியர் பிணைப் பதிவேடு/ விபரமான பட்டோலைகள் |

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை**

---

ன்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | விபரங்கள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் 14(1) ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது வரைவு ஆண்டறிக்கையின் ஓர் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 71 | 2006 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையில் இல்லாத "செயற்பாட்டு உதவியாளர்" பதவிக்காக பணி ஒப்படைப்பு அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் குறித்த காலப்பகுதிக்காக அவ் ஊழியர்களுக்கான கட்டணமாக ரூபா 26,111,450 தொகை செலத்தப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 135(1) | ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாடு ஒன்றை பேணுவதற்காக சம்பளத்தைத் தயாரிக்கும் செயற்பாடு சில உத்தியோகத்தர்களிடையே பகிர்ந்து செல்லும் வகையில் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிராததுடன் சம்பளத் |

| | | |
|---|---|---|
| | | தயாரிப்பு மற்றும் கொடுப்பனவு நடவடிக்கைகள் காசாளராலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| | (iii) நிதிப்பிரமாணம் 320 | 2010 யூன் 30 ஆம் திகதிய கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 258,048 தொகை பெறுமதியான 4 தீப் பாதுகாப்புப் பெட்டகங்களின் திறப்பு காணாமற்போயிருந்ததுடன் இது தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,577,800 பெறுமதியான கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் கணனிச் சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2009 செப்தெம்பர் 01 ஆம் திகதிய டீஎம்ஏ/2009(2) ஆம் இலக்க சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் நல்லாளுகைக்கான ஆலோசனைக் கோவையில் 7 அத்தியாயத்தின் 7.1 மற்றும் 7.2 உப பிரிவுகள் | பல்கலைக்கழகத்தின் பிரதான செயற்பாட்டுத் துறையும் மேவப்படும் வகையில் செயற்பாட்டு கையேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலான பற்றாக்குறை ரூபா 123,412,661 தொகையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 55,571,620 தொகையானமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 67,841,041 தொகையான வீழ்ச்சி காணப்பட்டது. சுய நிதியீட்டு நிகழ்ச்சித்திட்ட வருமானங்கள் கிடைக்காமை, தனிநபர் ஊதியம், போக்குவரத்துச் செலவினம், உடன்படிக்கையிடப்பட்ட சேவைச் செலவினம் மற்றும் நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு அதிகரித்திருந்தமை இவ் வீழ்ச்சிக்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 1423 மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட கிரயம் ரூபா 401,635,931 தொகையானதுடன் ஒரு மாணவனுக்கான கிரயம் ரூபா 282,246 ஆகக் காணப்பட்டது. இதற்கு ஒப்பாக முன்னைய ஆண்டில் 1787 மாணவர்களின் கல்விக் கிரயம் ரூபா 355,121,855 ஆகக் காணப்பட்டதுடன் ஒரு மாணவனுக்கான கிரயம் ரூபா 198,725 ஆகக் காணப்பட்டது. இதன் படி, முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் ஒரு மாணவனுக்கான கிரயம் ரூபா 83,521 ஆல் அதாவது 42 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக பல்கலைக்கழகத்திற்கு சேர்க்கப்பட்டிருந்த 538 மாணவர்களில் 59 மாணவர்கள் அதாவது 11 சதவீதமானோர் பாடநெறியை விட்டுச் சென்றிருந்தனர்.

(இ) 2013 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழகங்களில் 1:18 ஆன சராசரி விரிவுரையாளர் மாணவன் விகிதத்துடன் ஒப்பிடும் போது ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல்

உள்ளவாறான விரிவுரையாளர் மாணவன் விகிதம் 1: 14 ஆகக் காணப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 யூன் முதல் 2013 திசெம்பர் வரையான ஒவ்வொரு மாதமும் வெளிப் பாடநெறிகளால் உழைக்கப்பட்ட வருமானத்தில் ரூபா 10 இலட்சம் வட்டியைப் பெற்றுக்கொள்ளாது வங்கி நடைமுறைக் கணக்கு ஒன்றில் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் 14 விரிவுரையாளர்களும் 87 பயிலுனர் விரிவுரையாளர்களும் சேவையில் ஈடுபட்டிருந்த போதிலும் ஏற்பாட்டு ஆய்வு மானியத்தைப் பயன்படுத்தி ஆராய்ச்சிகளை நடாத்துவதற்கு 15 விரிவுரையாளர்களே செயற்பட்டிருந்தனர். இதன் படி, பல்கலைக்கழகத்தின் முக்கிய நோக்கமான ஆராய்ச்சிகளை நடாத்துவதனை ஊக்கப்படுத்துவதற்கு ஆராய்ச்சிக் குழு போதியளவில் செயற்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 4.3 நிதியத்தின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது உள்ளக ஆய்விற்காக வருடாந்தப் பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட மீண்டெழும் ஏற்பாடுகளிலிருந்து முறையே 50 சதவீதம், 80 சதவீதம் மற்றும் 54 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆராய்ச்சிகளை ஊக்கப்படுத்துவதற்காக 2013 ஆம் ஆண்டின் போது பாதீடிடப்பட்ட மூலதன ஏற்பாடான ரூபா 1,790,000 தொகையில் ரூபா 362,170 தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி, ரூபா 1,427,830 தொகையான ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் இது ஏற்பாட்டில் 80 சதவீதமாகும்.

## 4.4 விளைவற்றதும் குறைபயன்பாடுடையதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 யூன் 30 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 322,560 பெறுமதியான 05 தீக் காப்பு பெட்டகங்கள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது பொறியியல் வேலைத்தளத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 14,060,480 பெறுமதியான 3 – Axis CNC இயந்திரம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) சிற்பவேலை அபிவிருத்தி ஆய்வுகூடத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் 02 ஆண்டுகளாக உள்ளக விளையாட்டரங்காக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக பங்களிப்புத் தொகை குறித்த நாட்களில் செலுத்தப்படாமையால் ரூபா 1,765,472 தொகையான மிகைக் கட்டணத் தொகையும் ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட வேண்டிய 8 சதவீதமான பங்களிப்புத் தொகையாக ரூபா 1,439,044 தொகை பல்கலைக்கழகத்தால் ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு 2006 முதல் 2012 சனவரி வரையான அரையாண்டு அறிக்கை குறித்த தினத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிராமை மற்றும் பங்களிப்புத் தொகை குறித்த தினத்தில் செலுத்தப்பட்டிராத காரணத்தால் ரூபா 193,816 தொகையான மிகைக்கட்டணத் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

206

## 4.6 நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள்

2010 இல் வேலை ஆரம்பிக்கப்பட்டு 2011 ஆம் ஆண்டின் போது வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய பின்வரும் செயற்திட்டங்கள் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| நிர்மாண வேலைகள் | வேலை ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | வேலை நிறைவேற்றப்பட வேண்டிய திகதி | பெறுமதி |
|---|---|---|---|
| கழிவுக் கால்வாய் முறைமை | 2010.08.16 | 2011.08.15 | 17,800,000 |
| மழை நீர் அகற்றல் முறைமை | 2010.08.02 | 2011.01.28 | 23,190,000 |

## 4.7 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பதவியணியில் 07 பேராசிரியர் பதவிகளுக்கும் 48 சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியில் தகுதிகாண் விரிவுரையாளர்களின் பதவியின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 69 ஆகவும் உள்ளபடியான எண்ணிக்கை 87 ஆகவும் காணப்பட்டமையால் 18 பதவிகளில் மிகை காணப்பட்டது.

(இ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் vi ஆம் பகுதியின் 33 ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் நூலகர் பதவிக்காகவும் நிதிப் பொறுப்பாளர் பதவிக்காகவும் 2006 ஆம் ஆண்டு முதல் வெற்றிடம் காணப்பட்டது.

(ஈ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பதவியணியில் 211 பதவிகளில் 89 பதவிகளும் கல்விசாரா பதவியணியில் 126 பதவிகளில் 83 பதவிகளும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) எழுதுவினைஞர் ஒருங்கிணைந்த சேவையுடன் தொடர்புடைய 27 கணனி உள்ளீட்டு உதவியாளர் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படாது பல்கலைக்கழக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கையில் அல்லாத பதவியான செயற்பாட்டு உதவியாளர் பதவிக்காக 2005 ஆம் ஆண்டு முதல் ஒப்படை அடிப்படையில் அவ்வப்போது ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ்வாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த செயற்பாட்டு உதவியாளர்களின் எண்ணிக்கை 21 ஆகக் காணப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2002 மே 24 ஆந் திகதிய பீஎப்/பீஈ-21 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக 2014 மே 07 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. கணக்காய்வு அவதானிப்புகளைத் தொடர்ந்து திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2014 யூலை 11 ஆம் திகதியும் 2014 நவம்பர் 21 ஆம் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 பெப்ரவரி 01 ஆம் திகதிய 79/25 ஆம் மற்றும் 79/24 ஆம் இலக்க கட்டுப்பாட்டுச் சபை தீர்மானத்தின் படி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் 2013 முதல் 2017 காலப்பகுதிக்குரிய கூட்டிணைந்த திட்டத்திலும் 2013 செயற்பாட்டுத்திட்டத்தில்

உள்ளடக்கப்பட்ட 12 செயற்றிட்டங்களிலும் போதுமான மாற்றங்கள் காணப்பட்டன.

(ஆ) 2013 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய மூன்று ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவுகள் தொடர்பாக மீளாய்வொன்று 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது தயாரிக்கப்பட்டு கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே, நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகளின் நிதித் தொகைகள் காண்பிக்கப்பட்டிராமையால் வருடாந்த செயல்முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்குக் கூடிய முறையில் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

2013 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பௌதீக முன்னேற்றத்தை அளவிடுவதற்கான செயலாற்றல் அறிக்கை இரண்டாம் காலாண்டு முதல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 உள்ளகக் கணக்காய்வு

ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட இரண்டு செயற்பாட்டு உதவியாளர்களால் 2013 ஆம் ஆண்டின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நிரந்தரமான, அனுபவம்வாய்ந்த பதவியணியொன்று ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.5 கொள்வனவுத் திட்டம்

2006 ஆம் ஆண்டு கொள்வனவு வழிகாட்டிக்கோவையின் 4.2.1 மற்றும் 4.2.2 ஆம் பந்திகளின் பிரகாரம் பிரதான கொள்வனவுத் திட்டம் நாளதுவரையாக்கப்பட்டிராததுடன் கொள்வனவுக் காலத் திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.6 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் மூலதனச் செலவினத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 390,790,000 தொகையான் ஏற்பாட்டில் ரூபா 126,033,453 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. இது மொத்த மூலதன ஏற்பாட்டின் 32 சதவீதமாகக் காணப்பட்டது.

(ஆ) மதிப்பிடப்பட்ட செலவினம், உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பிடப்படுகையில் 05 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாட்டுத்தொகையில் 23 சதவீதம் முதல் 81 சதவீதம் வரையான முரணும் 05 மூலதனச் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாட்டுத்தொகையில் 23 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையான கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரணும் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

**5.7 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள் தொடர்பான அவதானிப்புகள்**

2012 செப்தம்பர் 21 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் கணக்கு குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி, கழிவு நீர் மீள்சுழற்சி செயற்திட்டத்தினைப் புனரமைப்பதற்கு இது வரை பல்கலைக்கழகம் தவறியிருந்தது.

**5.8 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றல்**

**கழிவு நீர் மீள்சுழற்சி செயற்திட்டம்**

2010 ஒக்தோபர் 05 ஆம் திகதி நீர் மீள்சுழற்சி செயற்திட்ட நிர்மாணிப்பு ஒப்பந்தம் ரூபா 23,190,000 தொகைக்கு மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 2011 சனவரி 03 ஆம் திகதி நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த இச் செயற்திட்டம் தோல்வியானதென்பதால் மீள புனரமைப்புச் செய்யப்படுவது மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்தினால் 2013 யூனில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய செயற்பாடுகள் இடைநடுவில் ஸதம்பிதமடைந்து காணப்பட்டன. ஆகையால்

தற்போது நீர் சுத்திகரிக்கப்படாது சுற்றாடலுக்கு விடுவிக்கப்படுவதைக் காணக்கூடியதாக இருந்தது.

06. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஈ) நிதி முகாமைத்துவமும் செலவினக் கட்டுப்பாடும்
(உ) மனித வள முகாமைத்துவம்

ஒப்பம். டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)
*Ms/v*

## 23. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கருத்துரை |
|---|---|
| 2.2. <u>நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்</u> | |
| 2.2.1. **கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பா்டுக் கணக்குகள்**<br><br>2013ஆம் ஆண்டிற்கான கிடைக்கப்பெற வேண்டிய முற்பணங்கள் மற்றும் மாணவர் உதவு தொகைகள் கணக்கில் இருந்த மீதம் ரூபா. 3,611,200/= ஆகும். நிதிசார் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிரலில் ரூபா.3,781,521/= ஆக கூறப்படும் காரணமாக ரூபா.170,321 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. | 2013 ஆம் ஆண்டிற்கென கிடைக்கப்பெற வேண்டிய மாணவர் உதவு தொகைகள் குறித்த விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.<br><br>**<u>தொகைகள்</u>**<br>கிடைத்த திகதி: 08.01.2014 (கொடுப்பனவு கால அளவு செப்டெம்பர் - நவம்பர் 2013) — ரூ. 314,300.00<br>19.05.2014 (கொடுப்பனவு காலஅளவு டிசம்பர் 2013) — ரூ. 931,100.00<br>1ம் வருட மாணவர்களுக்கு செலுத்தப்பட்ட முற்பணங்கள் — ரூ.1,536,121.00<br>**மொத்தம் — 3,781,521,00** |
| **2.3. கிடைக்கப்பெற வேண்டிய மற்றும் செலுத்தப்படவேண்டிய கணக்குகள்**<br><br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br><br>i. 2007ஃ2008 மற்றும் 2008ஃ2009 கல்வியாண்டுகளில் தங்கியிருந்து இறுதியாண்டுப் பரீட்சைக்குத் தோற்றி பின்னர் விலகிச் சென்ற 98 மாணவர்களிடமிருந்து கிடைக்கப் பெறவேண்டிய விடுதிக்கட்டணம் ரூபா.59,870 மற்றும் கிரயத் தொகை ரூபா 356,677 ஆகியவற்றை அறவிடுவதற்கான நடவடிக்கை 26 மே 2014 அளவில் கூட எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2007/2008 ஆம் கல்வியாண்டைச் சேர்ந்த 13 மாணவர்கள் 2012 பட்டமளிப்புக்குத் தகுதி பெற்றிருக்கவில்லை என்பதுடன், 2013 பட்டமளிப்புக்கென எண்மர் தகுதிபெற்றுள்ளனர். அவர்கள் பட்டமளிப்புக்குச் சமுகமளிக்கும் முன்னரே அவர்களிடமிருந்து வருமதியாகவுள்ள தொகைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>விடுதிக்கட்டணங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தண்டப் பணங்களைச் செலுத்துமாறு ஏனைய மாணவர்களுக்கு கடித மூலம் அறிவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். |
| ii. பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டிருந்த பேராசிரியர் ஒருவருக்கு 2011 ஜனவரி – ஜுலை காலப் பகுதிக்கென திருப்பிச் செலுத்தல் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்த ரூபா. 93,546ஃஸ்ரீஆராய்ச்சிப் படிகள் பேராதனைப் பல்கலைக்கழகத்திடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.<br><br>iii. 2007,2008 மற்றும் 2010 ஆம் வருடங்களில் மூன்று அலுவலா்களுக்கு வழங்கப்பட்ட கடன்களில் 2013 டிசம்பர் 31ஆம் திகதியன்று உள்ளவாறான துயர் துடைப்புக் கடன் மீதியான 6,753,253 இல் உள்ளடக்கப்பட்டுள்ள மொத்தம் - ரூபா. 238,275 2013 டிசம்பர் 31 இல் கூட அறவிடப்பட்டிருக்கவில்லை. | வருமதியான தொகைகளை சம்பந்தப்பட்ட தொகைப் பணத்தை செலுத்துமாறு கோரும் ஞாபகமூட்டல் கடிதங்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.<br><br>துயர் துடைப்புக் கடனைப் பெற்றிருந்த திருமதி. A.C. வீரசூரிய காலமாகியுள்ளதுடன், பல்கலைக்கழகம் ஊழியர் நிதியங்களிலிருந்து அவரது கடனை தீர்ப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. இது சம்பந்தமான |

<table>
<tr><td></td><td>ஆவணங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளன. பட்டப்பின் படிப்புக்களுக்கென வெளிநாடு சென்றிருந்த விரிவுரையாளர் திரு. மு.யு.பு.ஊஇ கஹந்தவ கடமைக்கு திரும்பாமையால் அவரது சேவைகளை முடிவுறுத்துவதற்கான ஒழுங்குகளை பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ளது. அவர் பெற்றிருந்த துயர் துடைப்புக் கடனைத் திருப்பிச் செலுத்துமாறு அவருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>iv. நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2013 டிசம்பர் 31இல் உள்ளவாறான பண்டிகை முற்பணக் கடன் மீதமான ரூபா.108,000 இல் 2010,2011 மற்றும் 2013 ஆம் ஆண்டுகள் ஒவ்வொன்றிலுமான ஏப்ரல் மாதங்களில் வழங்கப்பட்ட பண்டிகை முற்பணக் கடன் மீதிகளான ரூபா.11,000 இன்னமும் அறவிடப்படாமல் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.</td><td>பல்வேறு காரணங்களின் நிமித்தம் தத்தம் சேவைகளிலிருந்து நிறுத்தப்பட்டிருந்த D.D.T. மதுானி RDMP பள்ளியகே மற்றும் DMRK திசநாயக்க ஆகியோரால் பெறப்பட்டுள்ள பண்டிகை முற்பணங்கள் கொடுத்துத் தீர்க்கப்படாமல் உள்ளன. அவர்களிடமிருந்து வருமதியான பணத் தொகைகளை திருப்பிச் செலுத்தும்படி அவர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>2.4. <u>கணக்காய்வு சான்றின்மை</u><br><br>கணக்கு மீதிகள் மீது குறிப்பிடப்பட்டுள்ள சான்று கணக்காய்வுக்கென சமர்ப்பிக்கப்படவில்லை.<br><br><table>
<tr><th><u>கணக்கு விடயம்</u></th><th><u>பெறுமதி</u></th><th><u>சமர்ப்பிக்கப்படாத சான்று</u></th></tr>
<tr><td>கிடைக்கப்பெற வேண்டிய பிணைய வைப்புக்கள</td><td>3,325,000</td><td>பிணை முறிகள்</td></tr>
<tr><td>ஊழியர் பிணையங்கள</td><td>50,000</td><td>ஊழியர், பிணையப் பதிவேடு/ விபரங்களடங்கிய நிரல்கள்</td></tr>
</table></td><td>நான் பிணைய வைப்புக்களைச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கையை எடுக்கவுள்ளேன்.<br><br>எஸ். சிவபாலன் (காசாளர்) ரூபா.25,000/=<br>பி. அத்தநாயக்கக (களஞ்சியக் காப்பாளர்) ரூபா. 25,000/=</td></tr>
<tr><td>2.5. <u>சட்டங்கள், விதிகள், விதிமுறைகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்கி ஒழுங்காமை</u><br><br>கணக்காய்வின் போது, பின்வரும் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்படுகின்றன.<br><table>
<tr><td>(அ) 1971 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் பிரிவு 14 (i).22</td><td>மீளாய்வு ஆண்டிற்கான வரைபு ஆண்டறிக்கைப் பிரதியொன்று கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.</td></tr>
<tr><td>ஆ. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிசார்</td><td></td></tr>
</table></td><td>வரைபு ஆண்டறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், நான் அவற்றை கணக்காய்வாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| ஒழுங்குவிதிகள் | | |
| இ. (i) நிதி விதிமுறை 71 | பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் எண்ணிக்கையில் கிடைக்கப்பெறாத செயற்பாட்டு உதவியாளர் பதவிக்கென ஊழியர்கள், 2013 காலப்பகுதியில் உரித்தீட்டு அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களின் கட்டணங்களாக ரூ. 26.111,450/= பணத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இப்பல்கலைக்கழகத்திற்கு செயற்பாட்டு உதவியாளர் பதவியொன்றை உருவாக்குமாறு கடந்த 2006ஆம் ஆண்டிலிருந்து கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்ததுடன், பேரவையின் ஒப்புதலுடன் இந்தப் பதவியை வழங்குமாறு தொடர்ச்சியாக கோரப்பட்டு வந்துமுள்ளது.<br><br>மேலதிக நேரவேலை, வார இறுதிக் கொடுப்பனவுகள் மற்றும் அமைதியின்மையை உருவாக்கக்கூடிய தொழிற்சங்க மற்றும் ஏனைய செயற்பாடுகளற்ற சேவை நிறுவனமொன்றாக இப் பல்கலைக்கழகத்தை நடாத்துவதற்கும், இப்பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயற்பட்டு வரும் நிறுவனங்களின் தேவையொன்றாக இருந்துவரும் புதியதோர் தோற்றப்பாடுடனான பல்கலைக்கழகமொன்றாக செயற்படுவதற்குமான தேவைப்பாடே இத்தகைய கோரிக்கைக்குக் காரணமாகும்.<br><br>இதே காரணத்தைக் கருத்திற் கொண்டே, கல்விசாரா ஊழியர்களை பேரவையின் ஒப்புதலுடன் ஊழியர்களை தற்காலிக மற்றும் பயிலுநர் அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த உத்தியானது பல்கலைக்கழக செயற்பாட்டினை மென்மேலும் வெற்றிகரமாகவும் பயனுறுதி மிக்கதாகவும் ஆக்கிட வழிசமைக்குமென நாம் கருத்துரைக்க விழைகின்றோம். |
| ii. நிதிசார் விதிமுறை 135 (1) | பயனுறுதிமிக்க உள்ளகக்கட்டுப்பாட்டினைப் பேணும் வகையில், சம்பளத் தயாரிப்புப் பணியை கணிசமான அளவிலான அலுவலர்களிடையே பகிர்ந்தளிப்பதற்குப் பதிலாக, வேதனங்கள் மற்றும் கொடுப்பனவு செயற்பாடுகளின் தயாரிப்புப் பணியானது காசாளரினாலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தது | வேதன தயாரிப்புச் செயற்பாடுகள் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br>1. வேதனங்கள் தயாரித்தல் - செயற்பாட்டு உதவியாளர்<br>2. செவ்வை பார்த்தல் - சிரேʼட உதவிநிதியாளர் (வேதனங்கள்)<br>3. பரிந்துரைத்தல் - பதிவாளர்<br>4. அங்கீகரித்தல் - துணைவேந்தர்<br>5. சான்றுப்படுத்தல் - நிதியாளர். |

| | | |
|---|---|---|
| iii. நிதிமுறை – 320 | 2010 ஜுன் 30 அன்று கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 258,048 பெறுமதியுடைய 4 தீ பாதுகாப்புப் பெட்டகங்களின் சாவிகள் இடம்மாறி வைக்கப்பட்டிருந்தன. ஆயினும் நிதிசார் விதிமுறைகளுக்கிணங்க இந்த விவகாரம் கையாளப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழக தேவை கருதி 2010 ஜுன் 30 அன்று கொள்வனவு செய்யப்பட்ட ஐந்து தீ பாதுகாப்புப் பெட்டகங்கள் களஞ்சியக் காப்பாளரினால் பெறப்பட்டன. ஆயினும், இவைகள் சம்பந்தப்பட்ட பிரிவுகளில் இடப்பட்டிருக்கவில்லை. குறித்த பெட்டகங்கள் மிதமிஞ்சிய எடை கொண்டவையாக காணப்பட்டதனால் அவற்றை மேல் மாடிக்கு ஏற்றுவதற்கு அடி ஒன்றுக்கு அண்ணளவாக 400 ரூபாவை விநியோக நிறுவனம் கோரியது.<br><br>எனவே, (பழைய நூலகம் அமைந்திருந்த) தற்போதைய நிருவாகக் கட்டடத் தொகுதியின் கீழ்தளத்தில் அவற்றை வைக்குமாறு நிதியாளர் அறிவுறுத்தினார். அதன் பிரகாரம், குறித்து ஐந்து பெட்டகங்களும் சுத்திகரிப்பு சேவைப் பணியாளர்களைப் பாவித்து செலவு ஏதுமின்றி பழைய நூலகக் கட்டடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன. நான்கு பெட்டகங்களின் திறவு கோல்கள் சம்பந்தப்பட்ட துறைகளிடம் கையளிக்கப்பட்டிருக்காமையினால் அவை பாவனைக்குட்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br>முன்னைய கணக்காய்வுக் குழுவானது குறித்த நான்கு பெட்டகங்களும் குறித்த விநியோக நிறுவனத்திடமே திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டுமெனவும் அவை சம்பந்தப்பட்ட அமைவிடங்களில் பாவிக்க இயலாதவிடத்து அவற்றுக்குப் பதிலாக உருக்கு அலுமாரிகள் பெறப்பட வேண்டுமெனவும் தீர்மானித்திருந்தது. |
| இ. 2008 ஆம் ஆண்டு நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்று நிருபம் இர IVI/2002/02 | மீளாய்வு வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 1,577,800/= பெறுமதியுடைய கணினிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் ஆகியவை கணினி சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடங்கப்பட்டிருக்கவில்லை. | நான் கணினிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றை தன்னகத்தே கொண்டிருக்கும் சொத்துக்கள் பதிவேட்டினைத் திருத்தியமைக்கும் செயற்பாட்டில் ஈடுபடவுள்ளேன். |

<table>
<tr><td>ஈ. முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009செப்டெம்பர் 01ஆந் திகதியிடப்பட்ட சுற்றுநிருப இல டி.எம்ஏ2009 (2)</td><td>நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை</td><td>நிலையான சொத்துக்கள் பதிவேடானது கணக்காய்வுச் செலவுக்கென சமா்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் சுட்டியுரைத்துள்ளவாறு, அதன் குறைபாடுகளை நிவா்த்தி செய்திட நான் நடவடிக்கைகள் எடுக்கவுள்ளேன்.</td></tr>
<tr><td>உ. 2013ஆம் ஆண்டு ஜூன் 30 ஆந் திகதியிடப்பட்ட PWD/12 ஆம் இலக்க அரச நிறுவனங்களில் நல்லாட்சி சுற்று நிருபம் மீதான வழிமுறைகள் குறித்த அத்தியாயம் 7இன் பிரிவுகள் 7.1 மற்றும் 7.2</td><td>பல்கலைக்கழக செயற்பாட்டின் பிரதான துறைகளை மேவும் பொருட்டு செயற்பாட்டுக் கைந்நூல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை</td><td>கணிசமான அளவிலான துறைகளுக்கென செயற்பாட்டு வழிமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ள அதே வேளையில் ஏனைய துறைகளுக்கான செயற்பாட்டுப் கைந்நூல் தயாரிப்பு சம்பந்தமான செயற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.</td></tr>
<tr><td colspan="2"><u>4.தொழில்சாா் மீள்நோக்கு</u><br><br><u>4.1. செயலாற்றுகை</u><br><br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>(அ) மீளாய்வு வருட காலத்தின்போது 1423 மாணவா்களின் கல்விசாா் செயற்பாடுகளுக்கென ரூபா. 401, 344,436/= செலவாகியிருந்ததுடன், மாணவா் ஒருவருக்கான செலவு ரூபா. 282, 041/= ஆக இருந்தது. இதனுடன் ஒப்பிடுகையில், 1787 மாணவா்களின் கல்விசாா் செயற்பாடுகளின் செலவாக ரூபா. 355,121, 855 ஆக காணப்பட்ட அதேவேளையில், தனிநபா் செலவோ ரூபா. 198, 725 ஆகவே இருந்தது. ஆகையால், குறித்த மீளாய்வு வருடத்தின் தனியொரு மாணவருக்கான செலவானது ரூபா. 83,316 அதிகரிப்பொன்றை அல்லது முன்னைய வருடத்திலும் பாா்க்க 42 சதவீத அதிகரிப்பைக் காட்டியுள்ளது.</td><td>2011/2012 மாணவா் அணிச் சோ்க்கையில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, பதிவுசெய்யப்பட்ட மாணவா்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கையானது முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சி கண்டுள்ளது. அதே சமயம், முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் பதவியினரின் சம்பளங்கள், பாதுகாப்புச் சேவைகள் மற்றும் ஏனைய மீண்டுவரும் செலவினங்களின் அதிகரிப்பினால், முன்னைய வருட செலவுக்கு கூடுதலாக தனியொரு மாணவா் செலவானது அதிகரித்துள்ளது.</td></tr>
<tr><td colspan="2">(ஆ) குறித்த மீளாய்வு வருடத்தில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட 538 மாணவா்களுள், 59 மாணவா்கள் அதாவது, 11 சதவீதமானோா் கற்கை நெறிகளைக் கைவிட்டிருந்தனா்.</td><td>குறித்த மாணவா்கள் தனிப்பட்ட காரணங்களுக்காகவே கற்கை நெறிகளைக் கைவிட்டுள்ளனரென்பதனை அறிவிக்க விழைகின்றேன்.</td></tr>
</table>

| | |
|---|---|
| இ. 2013 டிசம்பர் 31இல் உள்ளவாறான ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் மாணவர் விகிதாசாரமானது 1:14 ஆக இருந்த அதே வேளையில் ,2013 ஆம் ஆண்டில் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களிலான சராசரி விகிதாசாரமோ 1:18 ஆகக் காணப்பட்டது. | கல்விசார் பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையின் பிரகாரமே ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். ஆயினும், பல்வேறு காரணங்களுக்காக காணப்பட்ட மாணவர் பதிவின்மை மற்றும் ஏனைய பல்கலைக்கழகங்களின் கற்கை நெறிகளுக்கென தெரிவு செய்யப்பட்டமை ஆகியவற்றினால் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் மொத்த எண்ணிக்கை குறைந்துள்ளது. ஆயினும், இத்தகைய சூழ்நிலை விரைவில் சீர்செய்யப்படும் |
| **<u>4.2. முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்</u>**<br><br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | |
| அ.2013 ஜூன் தொடக்கம் 2014 ஏப்ரல் வரையிலான காலப் பகுதியில் வெளிவாரிக் கற்கை நெறிகள் மூலம் உருவாக்கப்பட்ட வருமானத்தில் ஒரு மில்லியன் ரூபா வங்கிக் கணக்கொன்றில் வட்டி ஏதுமின்றி விளைவற்றுக் கிடந்துள்ளது. | நான் வெளிவாரிக் கற்கை நெறிகளுக்காக செலுத்துவதற்கான போதுமான வைப்பொன்றை செய்வதற்கும், எஞ்சியவற்றை குறுகிய கால தவணை முதலீடுகளில் முதலீடு செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கவுள்ளேன். |
| ஆ. 2013 ஆம் வருடத்தில் 14 விரிவுரையாளர்களும் 87 பயிலுநர் விரிவுரையாளர்களும் சேவையிலிருந்த போதிலும், 15 ஆசிரியர்கள் மட்டுமே ஒதுக்கப்பட்ட ஆய்வு உதவியைப் பாவித்து ஆய்வு நடாத்தியிருந்தனர். ஆகையால், பல்கலைக்கழகத்தின் பிரதான இலக்குகளுள் ஒன்றான ஆராய்ச்சியை ஊக்குவிப்பதனை நோக்கி ஆராய்ச்சிக் குழுக்கள் பணியாற்றி இருக்கவில்லையென்பது அவதானிக்கப்பட்டுள்ளது. | விரிவுரையாளர்களால் வெளியிடப்பட்டுள்ள ஆய்வு அறிக்கைகள் மற்றும் வெளியீடுகளுக்கான விபரங்கள் 2013க்கான வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழக நிதிகளைப் பாவித்து மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சியொன்று காணப்படுகின்ற போதிலும், கணிசமான அளவிலான ஆராய்ச்சிகள் விரிவுரையாளர்களின் சொந்த நிதிகளைப் பாவித்து மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| **<u>4.3. நிதிகள் பயன்பாடு</u>**<br><br>பின்வரும் கருத்துரைகள் வழங்கப்படுகின்றன:-<br><br>அ. 2011,2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் உள்ளக ஆராய்ச்சிக்கென ஒதுக்கப்பட்ட நிதிகளில், முறையே 50% , 80% மற்றும் 54% பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை | 2002ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் ஏறுமுகமொன்றையே காட்டுகின்றன. ஆய்வுகூட வசதிகள் பற்றாக்குறை காரணமாகவே, குறித்த நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்திக் கொள்ளும் சாத்தியம் இல்லாமற் போயிற்று |

| | |
|---|---|
| ஆ. 2013ஆம் ஆண்டில் ஆராய்ச்சியை ஊக்குவிப்பதற்கென பாதீட்டில் சேர்க்கப்பட்டிருந்த மூலதன ஒதுக்கீடான ரூபா.1,790,000 இல், ரூபா.362,170 மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே, ஒதுக்கீட்டின் 80% மீதப்பணமாகிய ரூபா. 1,427,830 எஞ்சியுள்ளது. | பிரிவு 4.3 இல் தரப்பட்டுள்ள பதில் இதற்கும் பொருந்தும் |
| **4.4. ஆற்றுகைக்குட்படாத மற்றும் பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**<br><br>பின்வரும் கருத்துரைகள் வழங்கப்படுகின்றன.<br><br>அ. 2010 ஆம் ஆண்டு ஜூன் 30ஆம் தேதியன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா.322,560/= பெறுமதிமிக்க ஐந்து (05) தீ பாதுகாப்புப் பெட்டகங்கள் 2013ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதியன்று இவ்வாறான காலப்பகுதியில் பாவணைக்குகுட்படுத்தப்படாமலேயே கிடப்பில் போடப்பட்டன. | இந்தக் கருத்துரையை ஏற்றுக் கொள்வதுடன், பிரிவு 2.5 (c) III க்கு க்கான பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு அவற்றை உருக்கு அலுமாரிக்காகப் பரிமாற்றம் செய்வதற்கு தேவையான நடவடிக்கையை நான் எடுக்கவுள்ளேன் |
| ஆ. 2012 ஆண்டில் பொறியியல் செயலமர்வுக்கென கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 14,060,480/= பெறுமதியான 3-Axis CNC இயந்திரமானது 2013 டிசம்பர் 31ஆம் திகதி அன்றுள்ளவாறான காலப்பகுதியில் கூட பாவணைக்குட்படுத்தப்படாமலேயே கிடப்பில் போடப்பட்டது. | பொறியியல் செயலமர்வுக்குப் பொறுப்பாகப் பணியாற்றிவரும் விரிவுரையாளரால் தரப்பட்டுள்ள பதிலை (இணைப்பு I ) சமர்ப்பிக்கின்றேன். |
| இ. நகல்கள் (பிரதிகள்) அபிவிருத்தி ஆய்வுகூடத்திற்கென) நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டடமானது தேகப் பயிற்சிக்கூடம் ஒன்றாகவே பாவிக்கப்பட்டுள்ளது. | சம்பந்தப்பட்ட ஆய்வு கூடத்திற்குத் தேவையான ஆய்வுகூட உபகரணங்களை ஈட்டுவதற்கு போதியளவு ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. குறித்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படும்வரை குறித்த ஆய்வுகூடம் தேகப்பயிற்சிக் கூடமொன்றாகவே பாவிக்கப்படும். |
| **<u>4.5. இனங்காணப்பட்டுள்ள இழப்புக்கள்</u>**<br><br>பின்வரும் கருத்துரைகள் வழங்கப்படுகின்றன.<br><br>அ. பல்கலைக்கழகமானது, 1958 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் பிரகாரம், 2006ஆம் ஆண்டு தொடக்கம் 2012ஆம் ஆண்டுவரையிலான காலப்பகுதிக்கான நிதிப் பங்களிப்புக்களை செலுத்தாமைக்கான அபராதத் தொகையொன்றாக ரூபா.765,477 ஐயும் ஊழியர்களிடம் சம்பளங்களிலிருந்து | பல்கலைக்கழகமானது, இத்தகைய செயற்பாட்டு உதவியாளர்களின் சேவைகளை உரித்தீட்டு அடிப்படையில் பெற்றுக்கொள்வதுடன், ஊழியர் சேமலாப நிதியம் அல்லது உழியர் நம்பிக்கை நிதியம் எதற்கும் பங்களிப்பைச் செலுத்தும் தேவைப்பாடொன்று எழுந்திருக்கவேயில்லை. குறித்த விடயம் பற்றி, கணக்காய்வுப் பிரிவுகளால் |

கழித்தெடுக்கப்படவேண்டிய 8% பங்களிப்பாக ரூபா. 1,439,044 தொகையொன்றையும்) ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு செலுத்தியிருந்தது.

2006 – 2012 வரையிலான காலப்பகுதிக்கான அரையாண்டு அறிக்கைகளை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்குச் சமர்ப்பிக்கத்தவறியமைக்கும் உரிய காலத்தில் பங்களிப்புக்களை நிதியத்திற்கு செலுத்தாமைக்காகவும், ஈடு செய்யப்படவேண்டிய தகாத செலவாக ரூபா. 193,816/= ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

கேள்வி எழுப்பப்பட்ட பின்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, சட்ட மா அதிபர் திணைக்களம் மற்றும் பல்கலைக்கழகப் பேரவை ஆகியவற்றினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பேரில் கொடுப்பனவுகளைச் செய்வதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. அதன் பிரகாரமே, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்கான பங்களிப்புக்கள் செல்மதியாக செலுத்தப்பட்டுள்ளன. செலுத்தப்பட்டுள்ள ஈடுசெய்யப்பட வேண்டிய தகாத செலவு (அபராதத் தொகை) பற்றி பேரவைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும் நான் அறியத்தர விழைகின்றேன்.

**<u>4.6. நடைமுறைப்படுத்தப்படாத கருத்திட்டங்கள்</u>**

பின்வரும் கருத்துரைகள் வழங்கப்படுகின்றன.

அ. 2010ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2011ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுருக்க வேண்டிய பின்வரும் கருத்திட்டங்களின் பணிகள், 2014 மே 30ஆம் தியதியளவிலான காலப்பகுதியில் கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை

| நிர்மாணப் பணி | பணி ஆரம்பிக்க வேண்டிய திகதி | பணி முடிக்கப்பட வேண்டிய திகதி | பெறுமதி |
|---|---|---|---|
| வடிகாலமைப்பு முறைமை | 2010-08-16 | 2011-08-15 | 17,800/= |
| அகற்றல் முறைமை | 2010-08-02 | 2011.01.28 | 23,190/= |

வேண்டப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெற்றிராத காரணத்தினாலேயே, இணைப்புத் திட்டத்தின் கீழ் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிர்மாணப் பணிகளையும் ஆரம்பிப்பதற்கான சாத்தியம் அமையப்பெறவில்லை.

**<u>4.7. மனிதவளங்கள் முகாமைத்துவம்</u>**

பின்வரும் கருத்துரைகள் வழங்கப்படுகின்றன.

அ. பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியினரில் 07 பேராசிரியர் பதவி நிலைகளுக்கும் 48 சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி நிலைகளுக்குமான) ஆட்சேர்ப்பானது 2013 டிசம்பர் 31இல் உள்ளவாறான காலப்பகுதியில்) செய்யப்பட்டிருக்காமலேயே இருந்தது.

பேராசிரியர் மற்றும் விரிவுரையாளர் (தரங்கள் I மற்றும் II) பதவிகளுக்கான விளம்பரங்களை பத்திரிகைகளில் வெளியிடப்பட்டு ஆட்சேர்ப்புக்கள் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் தகுதிவாய்ந்த நபர்கள் கிடைக்கவில்லை. தகுதிவாய்ந்தோர் இருக்கும்போது ஆட்சேர்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இல்லாத போது சிரேஷ்ட விரிவுரையாளர் தரத்திற்கு பதவி உயர்த்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தற்போது, கற்கை விருப்பினைப் பெற்றுக்கொண்டுள்ள சுமார் 30 நபர்களும் தங்கள் பட்டப்பின் பட்டங்களைப்

| | |
|---|---|
| | பூர்த்தி செய்த பின்னர் நாடு திரும்பியதும் அவர்களின் வேண்டுதலின் பிரகாரம் அவர்களை சிரேஷ்ட விரிவுரையாளர்கள் பதவிக்குத் தரமுயர்த்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. |
| ஆ. டிசம்பர் 31இல் உள்ளவாறு, பல்கலைக்கழக கல்விசார் பதவியினரில் 18 மேலதிக தகுதிகாண் விரிவுரையாளர்கள் இருந்தனர். ஆங்கீகரிக்கப்பட்டள்ள தகுதிகாண் விரிவுரையாளர்களின் எண்ணிக்கை 69ஆக இருக்கையில் இன்னமும் 87 பேர் அந்தப் பதவியில் உள்ளனர். | சிரேட்ட விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்புப் செய்வதற்கு சாத்தியப்பட்ட இந் நோக்கத்திற்கென பத்திரிகை விளம்பரங்கள் வெளியிட்ட போதிலும் பல்கலைக்கழகம் தகுதிகான் விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பு செய்து வருகின்றது. தேவைப்படும் தராதரங்களை அவர்கள் பூர்த்தி செய்யும்போது, அவர்களை சிரேட்ட விரிவுரையாளர் பதவிக்கு தரமுயர்த்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. |
| இ. 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 33இன் உள்ள ஏற்பாடுகளுக்கமைவாக, நூலகர் மற்றும் நிதியாளர் பதவிகள் 2006ஆம் ஆண்டு தொடக்கம் வெற்றிடங்களாகவே இருந்து வந்துள்ளன. | நூலகர் பதவிக்கென 2013 டிசம்பர் 27 முடிவு தியதியுடனான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதிலும், தேவையான தகைமைகளைக் கொண்டுள்ள தேர்வு நாடிகள் எவருமே அவ்வாறு விண்ணப்பிக்கவில்லை.<br><br>நிதியாளர் பதவிக்கென பத்திரிகைகளில் பல சந்தர்ப்பங்களில் விளம்பரப்படுத்தப்பட்டன. ஆயினும், தகுதிவாய்ந்த தேர்வு நாடிகள் எவருமே விண்ணப்பித்திருக்கவில்லை. விளம்பரங்களை மீண்டும் வெளியிடுவதற்கான ஒழுங்குகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| ஈ. 2013 டிசம்பர் 31இல் உள்ளவாறு, அங்கீகரிக்கப்பட்டிருந்த 211 கல்விசார் பதிவியினர்களின் 89 பதவி நிலைகளும், அங்கீகரிக்கப்பட்டிருந்த 126 கல்விசாரா பதவியினரில் 83 பதவி நிலைகளும் நிரப்பப்டாமல் இருந்திருந்தன. | மேலே 2.2.6 (ஈ) – (i) ஆம் இலக்க வினாவுக்கான பதில் இந்த வினாவுக்கும் பொருந்தும் |
| உ. எழுதுவினைஞர் இணைந்த சேவையுடன் தொடர்புடைய கணினிப் பிரயோகங்கள் உதவியாளர்களுக்கான 27 வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பதிலாக, பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணித் திரட்டில் காணப்படாத செயற்பாட்டு உதவியாளர்கள் பதவிகளுக்கே ஊழியர்கள் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் காலத்திற்குக் காலம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். தொழிலில் இவ்வாறு ஈடுபட்ட செயற்பாட்டு உதவியாளர்களின் எண்ணிக்கை 2013 டிசம்பர் 31இல் உள்ளவாறாக, 21 ஆக இருந்தது. | |

<table>
<tr><td colspan="4">05. பொறுப்புக் கூறலும் நல்லாட்சியும்<br><br>5.1. நிதிசார் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்<br><br>2002 மே 24 பீஎப்ஃபீசீ-21 இலக்கமுடைய பொது நிதி சுற்று நிருபத்தின் பிரகாரம், 2013 டிசம்பர் 31இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிசார் வருட முடிவிலிருந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிட்டிருக்க வேண்டிய போதிலும், மீளாய்வு வருடத்திற்கான நிதிசார் கூற்றுக்கள் கணக்காய்வுக்கென 2014 மே 07ஆம் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது..<br><br>கணக்காய்வுக் கருத்துரையைத் தொடர்ந்து, திருத்தியமைக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் 2014 ஜுலை 14 மற்றும் நவம்பர் 21ஆம் திகதிகளில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.</td><td>போதியளவிலான ஆதரவுப் பதவியினர் பற்றாக்குறை காரணமாக, நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதில் தாமதமொன்று ஏற்பட்டதுடன், 2014 ஆம் ஆண்டு தொடக்கம் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கான ஒழுங்குகளை நான் மேற்கொள்ளவுள்ளேன்.</td></tr>
<tr><td colspan="4"><u>5.2.இணைந்த திட்டம்</u><br><br><u>பின்வரும் கருத்துரைகள் வழங்கப்படுகின்றன:-</u><br><br>அ. 2013 பெப்ரவரி 01 திகதிய 79/24 ஆம் இலக்கங்கள் கொண்ட பேரவைத் தீர்மானங்களின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டிருந்த பல்கலைக்கழகத்தின் 2013 – 2017 காலப் பகுதிக்கான இணைந்த திட்டத்திலும், 2013ஆம் ஆண்டின் செயல் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டிருந்த 12 கருத்திட்டங்களில் திசை மாற்றங்களை (வழிபிறழ்வுகள்) காண முடியும்</td><td></td></tr>
<tr><td>இணைந்த திட்டத்தி-லான குறியீடு</td><td>விவரணம்</td><td>நடைமுறைப் படுத்தலுக்கென நிரற்படுத்தப்பட்ட காலப்பகுதி</td><td>தற்போதைய நிலை</td><td></td></tr>
<tr><td>1.1.1.1.</td><td>வளாகத்திலிருந்து கைத்தொழில் அதிபர்களை சட்டப்படி வெளியேற்றுதலும் அவர்களை மீள அமர்த்தலும்</td><td>2013 முதலாம் காலாண்டு</td><td>போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை</td><td>பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள கைத்தொழில் அதிபர்களை வெளியேற்றுவதற்கான சட்ட நடவடிக்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 642/09 ஆம் இலக்க வழக்கின் கீழ் செயற்கிரமப் படுத்தப்பட்டு வருகின்றது. கடந்து 03.06.2013 இல் குறித்த வழக்கு கடைசியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்தக் கைத்தொழில் அதிபர்களை வெளியேற்றுவதற்கான துரித</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | நடவடிக்கைகளை எடுக்குமாறு எழுத்துமூல வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன. நான் இத்துடன் சம்பந்தப்பட்ட கடிதப் பிரதியொன்றை சமர்ப்பிக்கின்றேன். |
| 1.1.2.2. | விருந்தோம்பல் சுற்றுலாத்துறை மற்றும் நிகழ்வு முகாமைத்துவம், ஆகியவற்றுக்கான கலை அரங்கமொன்றை நிர்மாணித்தல் | 2013 முதலாவதிலிருந்து மூன்றாவது வரையான காலப்பகுதி | இது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை | விருந்தோம்பல் சுற்றுலாத்துறை மற்றும் நிகழ்வு முகாமைத்துவ, மாணவர்களுக்கென 'நு' கட்டடத் தொகுதியில் ஆய்வுகூடமொன்றும் சமையலறையும் தாபிக்கப்பட்டுள்ளன. ஆய்வு கூடத்திற்குத் தேவைப்படும் அனைத்து தளபாடங்களும் வழங்கப்பட்டுள்ளன. அந்த ஆய்வு கூடத்தில் மாணவர்களின் செயன்முறை வேலைகள் செய்யப்படும் |
| 1.1.1.3. | கட்டடத் தொகுதி 'G' யில் கூரைப் புனரமைப்பு | 2013ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டு | இது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை | 'CECB' நிறுவனத்தினால் தேவையான சீரமைப்புப் பணிகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டதுடன் முழுமையான கூரைப்பகுதியையும் சீரமைப்பதற்கான ஒதுக்கீடுகள் போதுமையாக இல்லாதிருந்தமையால், மேலதிக ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொண்டதும் முழுமையான கூரைப்பகுதியையும் நிர்மாணம் செய்விப்பதற்கான நடவடிக்கையை எடுக்கவுள்ளேன். |
| 5.2.2.1. | உடற்பயிற்சி அலுவலரொருவரையும் ஆதரவுப் பணியாளரொருவரையும் நியமித்தல் | 2013இன் முதலாம் காலாண்டு | ஆதரவுப் பணியாளரொருவர் நியமிக்கப் பட்டிருக்கவில்லை | சேவை வழங்குநர் ஒருவரிடமிருந்து உடற்பயிற்சி அலுவலர் ஒருவரின் சேவை பெறப்பட்டுள்ளதுடன் மாணவர்கள் தங்கள் விளையாட்டுச் செயற்பாடுகளை ஆற்றுவதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. |
| 8.1.1.1. | சர்வதேசக் கேள்வியை மனதிற் கொண்டு பட்டக் கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தல் | 2013 இன் முதலாம் காலாண்டு | போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | தற்போது வழங்கப்பட்டு வரும் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை இற்றைப் படுத்தல் நடைபெற்று வருகின்றது. அதே சமயம், சர்வதேசக் கேள்வியை மனதிற்கொண்டு, உட்கட்டமைப்பை விருத்தி செய்யும் பணியும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| 1.1.1.5 | விளையாட்டுக் கட்டடத் தொகுதியையும் தேகப் பயிற்சிக் கூடத்தையம் ஆரம்பித்தல் | 2013 இன் மூன்றாம் காலாண்டு | ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை | திட்டத்தில் காலாவதியானவற்றையும் ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்களையும் மீளாய்வு செய்த பின்னர் திருத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் பெறப்பட்டுள்ளதுடன் அதன் குறைபாடுகளைத் திருத்தியதன் பின்னர் நிர்மாணப் பணியைத் தொடக்க நான் நடவடிக்கை எடுக்கவுள்ளேன். |
| 1.2.1.4. | நூலக செயற்பாட்டிற்கான முகாமைத்துவ | 2013 இன் 2 ஆம் காலாண்டு | போதியளவு நடவடிக்கைகள் | ஊடமுரன டியளநன ஆயயெபநஅநவெ ளுலளவநஅ எனும் புதியதோர் முகாமைத்துவ தவவல் முறைமையொன்றை தாபிப்பதற்கான |

| | | | | |
|---|---|---|---|---|
| | தகவல் முறைமை யொன்றை அறிமுகப்படுத்தல்) | | எடுக்கப்பட் டிருக்க வில்லை | பணிகளை உயர்கல்வி அமைச்சு ஆரம்பித்துள்ளது. இதன் பணியானது "யுளஅநெ வுநஉா ளுநசஎஉைந டுவனஇ எனும் இந்திய தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் பூர்வாங்கப் பணி 2014 ஜுன் 04 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் தகவல் முறைமை விருத்தி சம்பந்தமான பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தகவல் முறைமையின் கீழான ஒன்பது கூறுகளை தாபிப்பது சம்பந்தமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 1.2.2.2. | பல்கலைக்கழகத்தின் வளத்திட்டமிடலுக்கான இணையத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட தகவல் முறைமையொன்றை அறிமுகப்படுத்தல் | 2013 இல் முதலாம் காலாண்டு | போதியளவு நடவடிக்கைகள்எடுக் கப்பட்டிருக் கவில்லை | இந்த வினாவுக்கு 1.2.1.4. ஆம் இலக்க வினாவுக்கான பதில் பொருந்தும் |
| 2.1.3.1. | புதிய பட்டக் கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தல் | 2013 இன் 2 ஆம் காலாண்டு | போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட் டிருக்கவில் லை | மருத்துவ பீடமொன்றைத் தாபித்து புதிய பட்ட நிகழ்வுத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான பூர்வாங்கப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. புதிய நிகழ்வுத் திட்டங்களை ஆரம்பிப்பது சம்பந்தமான முன்மொழிவு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், கல்விசார் பதவியினர் குழுவொன்றிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கென நியமிக்கப்பட்டுள்ள குழு தேவையான நடவடிக்கையை எடுத்து வருகின்றது. |
| 2.1.3.2. | சான்றிதழ் பயிற்சி நெறியை அறிமுகப்படுத்தல் | 2013 இன் முதலாம் காலாண்டு | போதியளவு நடவடிக்கைக எடுக்கப்பட் டிருக்கவில் லை | மருத்துவ உதவி மற்றும் காப்பீட்டுத் திட்டமொன்றை தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 8.1.1. | வெளிநாட்டு மாணவர்களை கவர்வதற்கான நிகழ்வுத் திட்டமொன்றை முறைப்படுத்தல் | 2013 இன் காலாண்டு | போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | இந்த வினாவுக்கு வினா இல மேலே உள்ள 1.2.1.4. க்கான பதில் பொருந்தும் |

| | |
|---|---|
| ஆ. 2013 ஜுன் 02 ஆந் தேதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் பிரிவு 5.1.2. இன் பிரகாரம், 2013-2017 காலப் பகுதிக்கென தயாரிக்கப்பட்ட இணைந்த திட்டமானது, இதற்கு முந்திய மூன்று வருடங்களின் செயற்பாட்டு பெறுபெறுகள் குறித்த மீளாய்வொன்றைக் கொண்டிருக்கவில்லை. அதே சமயம், குறித்த இணைந்த திட்டமானது இலக்குகளின் நிதிசார் பெறுமதிகள் குறிப்பிடப்படாதிருந்ததனால், வருடாந்த முன்னேற்றம் மதிப்பீட்டிற்கு வழிவகுக்கக் கூடிய இணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்திக்கவில்லை | நான் இணைந்த திட்டத்தை சம்பந்தப்பட்ட திருத்தங்களுடன் இற்றைப் படுத்திடும் வகையில் செயற்பட்டுள்ளேன். எட்டப்படவேண்டிய இலக்குகள் இணைந்த திட்டத்தில் பிரதான செயலாற்றுகை சுட்டிகளாக (KPI's) கொடுக்கப்பட்டுள்ளன. இணைந்த திட்டத்தில் தரப்பட்டுள்ள செயற்பாடுகள் வருடாந்த செயல்திட்டத்தில் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன், அத்தகைய எண்களை தரக்கூடிய பணிகளுக்கென நிதிசார் பெறுமானங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. |
| **<u>5.3. செயல்திட்டம்</u>**<br><br>2013 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டத்தின் பௌதீக வளர்ச்சியை மதிப்பிட இயலச் செய்யும் செயலாற்றுகை அறிக்கைகள் 2ஆம் காலாண்டு தொடக்கம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட பௌதிக முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான செயலாற்றுகை அறிக்கைகளை தயாரிப்பதற்கு நான் நடவடிக்கை எடுக்கவுள்ளேன். |
| **<u>5.4. உள்ளகக் கணக்காய்வு</u>**<br><br>2013ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள், ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட செயற்பாட்டு உதவியாளர்கள் இருவராலேயே மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இதற்கென, நிரந்தரமான மற்றும் அனுபவம் வாய்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழகத்திற்கான ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்வதன் பிரகாரமே உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கென ஊழியர்கள் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர். |
| **<u>5.5. பெறுகைத் திட்டம்</u>**<br><br>பெறுகைத் திட்டமானது 2006ஆம்ஆண்டின் பெறுகை வழிமுறைகளின் பிரிவுகள் 4.2.1. (e) மற்றும் 4.2.2. ஆகியவற்றின் பிரகாரம் இற்றைப்படுத்தப் படாமல் இருந்ததுடன், பெறுகைத்திட்டமொன்றும் தயாரிக்கப்படாமலேயே இருந்துள்ளது. | பெறுகைத் திட்டத்தினை இற்றைப்படுத்துவதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன். |
| **<u>5.6. பாதீட்டுக் கட்டுப்பாடு</u>**<br><br>அ. பின்வரும் கருத்துரைகள் வழங்கப்படுகின்றன:-<br><br>2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டிலிருந்து மூலதன | <br><br><br><br>2013ஆம் ஆண்டு செப்டெம்பர் தொடக்கம் டிசம்பர் |

| | |
|---|---|
| செலவினத்திற்கென வழங்கப்பட்டிருந்த 303,790,000 ஒதுக்கீட்டில் ரூபா.126,033,453/= தொகைப் பணம் சேமிக்கப்பட்டிருந்தது.<br><br>இது ஒட்டுமொத்த மூலதன ஒதுக்கீட்டின் 32 சதவீதமாகும். | வரையிலான காலப்பகுதியில் நிதி ஒதுக்கீடுகள் கிடைக்காத நிலையே இந்தச் சேமிப்பு ஏற்படக் காரணமாயிற்று. |
| 5.7. ஆ. குறிப்பிடத்தக்க மாறுபாடுகள் காணப்பட்டுள்ளதால் பாதிடானது பயனுறுதிமிக்க முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பாவிக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. அதாவது, மதிப்பீட்டுச் செலவினங்களை உண்மையான செலவினங்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டபோது, 05 மீண்டுவரும் உரிமைவாக்குத் தொகுதிகளில் 23 சதவீதத்திலிருந்து 81 சதவீத மாறுபாடுகளும், 05 மூலதன உரிமை வாக்குத் தொகுதிகளில் 23 சதவீதத்திலிருந்து 96 சதவீதம் வரையிலான மாறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன. | 2013 செப்டெம்பரில் இருந்து டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் மீண்டுவரும் மற்றும் மூலதன ஏற்பாடுகள் வழங்கப்படாமையே இத்தகைய மாறுபாடுகளுக்கு வழிவகுத்துள்ளது. |
| **<u>5.8. தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள் மீதான கருத்துரை</u>**<br><br>பொது முயற்சிகள் மீதான குழுவினால் 2012 செப்டெம்பர் 21ஆம் தேதியன்று நடாத்தப்பட்ட அதன் கூட்டத்தில் வழங்கப்பட்ட பணிப்புரைகளின் பிரகாரம், பல்கலைக்கழகமானது, கழிவுநீர் மீள் சுழற்சி கருத்திட்டத்தைப் புனரமைப்பதற்கு தவறவிட்டிருந்தது. | கருத்திட்டத்தில் சுட்டியுரைக்கப்பட்ட குறைபாடுகளை நிவர்த்திக்குமாறு ஒப்பந்ததாரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது விடயத்தில், நேர்த்தியான முறையில் தாக்கட்டுப்பாடு பேணப்படும் வகையில் நிர்மாணப் பணிக்கான கொடுப்பனவுகளைச் செய்யாதிருக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| **<u>5.9. சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புடைமைகளைப் பூர்த்தி செய்தல்</u>**<br><br>**கழிவு நீர் மீள்சுழற்சி கருத்திட்டம்**<br><br>கழிவு நீர் மீள்சுழற்சி கருத்திட்டத்திற்கான ஒப்பந்தப் பணியானது ஊநுஊடீ நிறுவனத்திற்கு ரூபா. 23,190,000/= வுக்கு 2010 ஒக்டோபர் 05ஆம் தேதியன்று வழங்கப்பட்டது. மேற் குறிப்பிட்ட நிறுவனம் புனரமைப்புப் பணியினை ஆரம்பித்திருந்த போதிலும், இந்தக் கருத்திட்டம் வெற்றியளிக்காமையினால், அது 2011 ஜனவரி 03 ஆம் தேதியன்று நிர்மாண பணி முடிவில் பல்கலைக்கழகத்திடம் கையளிக்கப்பட்டிருந்தது. புனரமைப்புப் பணியானது பாதியில் நிறுத்தப்பட்டிருந்தது. எனவே, நீர் சுத்திகரிக்கப்படாத நிலையில் சுற்றாடலுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. | வடிகாலமைப்பு முறைமை செயற்படாமை காரணமாக, பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி. ஜீ.பி.பீ.ஹேரத் மற்றும் கலாநிதி சீ.எஸ்.கல்வகே ஆகியோரிடமிருந்து ஆலோசனை அறிக்கையொன்று பெற்றப்பட்டதுடன், நாம் அந்த அறிக்கையைச் செவ்வைபார்த்து அதன் உள்ளடக்கத்தின் பிரகாரம் சம்பந்தப்பட்ட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு ஊநுஊடீ நிறுவனத்திற்கு 2013 மே 17 இல் அறிவித்தோம். அந் நிறுவனம் தனது பணியைத் தொடர்ந்த நேரத்தில் பராமரிப்பு வேலைக்கென பெருந்தொகைப்பணம் செலவிட வேண்டிய நிலை தெரிய வந்தது ஆகவே, ஊநுஊடீ நிறுவனம் சம்பந்தப்பட்ட முன்மொழிவை மீளாய்வு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாதாந்த மின்சார செலவுகள் குறைக்கப்பட்டுள்ளதுடன் இதனை மீண்டும் |

| | |
|---|---|
| | சமா்ப்பிக்குமாறும் கோரப்பட்டது. |
| **<u>06. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்</u>**<br><br>கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் துணை வேந்தரின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் குறித்து விசேட கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்:-<br>அ. கணக்கீடு<br>ஆ. சொத்து முகாமைத்துவம்<br>இ. களஞ்சிய நிருவாகம்<br>ஈ. நிதிசாா் முகாமைத்துவமும் செலவுகள் கட்டுப்பாடும்<br>உ. மனிதவள முகாமைத்துவம் | நான் இத்தகைய அம்சங்களில் கருத்தூன்றி செயற்படவுள்ளேன். எதிா்காலத்தில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் ஆகியவற்றிலான அத்தகைய நலிவுகளைத் தடுப்பதற்கு விசேட கவனஞ் செலுத்தி செயற்படவுமுள்ளேன். |